திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 4

அடிமேல் அடி

ரங்குபட்டர்:- ஓய்! கேட்டீரா அக்ரமத்தை. அரிஜனங்களை ஆலயங்களிலே அர்ச்சகர்களாக நியமிக்க வேணுமாம்!

சிங்குபட்டர்:- யாருக்கு ஓய்! இப்படிபட்ட விசித்திரமான யோசனை உதிச்சிருக்கு?

ர:- விசித்திரமான யோசனையா! விபரீதமல்லவோ இது! விநாச காலே விபரீத புத்தி!

சி:- சாபம் தருவது பிறகு இருக்கட்டும், யார் சொல்றா இதுபோல ......எங்கே? எப்போது? ஏன்?

ர:- ஏனா! எல்லாம் தலைகீழா நடக்கற காலமன்னோ இது. காலக்கோளாறு ஓய்! காலக்கோளாறு. பகிரங்கமாப் பேசறா பாவிகள்—சட்டசபையில்!

சி:- சட்டசபைப் பேச்சா இது!

ர:- ஆமாம் ஓய்! இப்ப சட்டசபைகளிலே இப்படிப்பட்ட விஷயம் தானே பேசப்படறது......ஆந்திர சட்டசபையிலே ஒருவர், அரிஜனங்களை உயர்ந்த ஜாதிக்காராள் கொடுமை செய்வதாகப் பேசினார்—அதைத் தொடர்ந்து பேசும்போது, சமத்துவம் ஏற்பட வேணுமானா, கோயில்களிலே அரிஜனங்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேணும்னு சொல்லி இருக்கார் ஒருத்தர்.

சி:- ஆந்திராவிலா! இருக்காதே! அவா, இங்கே உள்ள தமிழாள் போல அல்லவே! நல்ல பக்திமான்களாச்சே! பிரமணாளிடம் விசுவாசம் உள்ளவா!!

ர:- நீர் தான் மெச்சிக்கொள்ள வேணும். அந்த ஆந்திரா சட்டசபையிலேதான், அரிஜனங்களை அர்ச்சகர்களாக்க வேணும்னு பேசறா—கொஞ்சம் கூட பாபத்தைப் பத்தின பயமில்லாமல். சர்வேஸ்வரா! இதை எல்லாம் எப்படி டாப்பா, சகித்துக்கொண்டிருக்கே!

சி:- ஏன் ஓய்! சர்வேஸ்வரனை அழைக்கிறீர். அவர் என்னசெய்வார்! அரிஜனங்கள் அவரைப் பார்த்தா போச்சு, தீட்டுபட்டுவிடும், தேஜசு கெட்டுவிடும், மூர்த்திகரமே போய்விடும் என்பது தானே நமக்கு யுகயுகமாக இருந்து வருகிற ஐதீகம். என்ன ஆச்சு அந்த ஐதீகம்! கோயில் கதவுகளைத் திறந்தாச்சு!! என்ன செய்யமுடிந்தது சர்வேஸ்வரனால்! செய்யவேணும்னு அவர் எண்ணியிருந்தாரானா, எதைத்தான் செய்திருக்கக் கூடாது? என்னசெய்தார்?

ர:- கோபத்தைக் கிளறாதீர், ஓய்! ஏதோ போனா போகட்டும், அவா அவ்வளவு தூரம் கதறிண்டிருக்காளேன்னு கோயிலிலே நுழைய இடமளித்தோம்......

சி:- ஏன் ஓய்! நமக்குள்ளாக்வா, இப்படி பாண்டியத்தைக் காட்டிக்கொள்றது! போனா போகட்டும்னா, அவாளை உள்ளே அழைச்சிண்டோம். அவா, மளமளன்னு இலட்சக்கணக்கிலே, கிருஸ்தவ மதத்திலேயும், முஸ்லீம் மதத்திலேயும் சேர ஆரம்பிச்சா—என்ன செய்வது—இந்துமதமே இருக்குமிடம் தெரியாமல் போய்விடும்போலிருக்கேன்னு கோயிலைத் திறந்துவிட்டோம்.....

ர:- சரி, அப்படியே இருக்கட்டும். அதனாலே? இப்ப, அவா அர்ச்சகர்களாகவும் வரலாம்என்கிறீரா?

சி:- நம்மைக் கேட்டுண்டா காரியம் நடக்கப்போறது.....மேலும் ஓய்! இந்தக் காலத்திலே, அவா அர்ச்சகர்களா வந்துவிட்டாலும் அவாளுக்கு பிரமாதமான இலாபமொன்றும் வந்துவிடப் போவதில்லை—நமக்கும் பெரிய நஷ்டமொன்றும் ஏற்பட்டுவிடாது.

ர:- என்ன ஓய்! புதிர்போட்டுப் பேசறீர்?

சி:- ஓய்! அர்ச்சகர்களாக யார் வந்தா என்ன! முன்னேமாதிரி கோயில்களுக்கு, மகாராஜாக்கள், ராஜாக்கள், ஜெமீன்தாராள், ஜாகீர்தாராள், இவாளெல்லாமா வருகிறா! அப்படிப்பட்ட லட்சுமீ புத்ரா வரும்போது, அர்ச்சகர்களா இருப்பவாளுக்கு நல்ல இலாபம் உண்டு-மரியாதை உண்டு—செல்வாக்கு உண்டு. இப்ப என்ன ஓய்! இருக்கு? பல கோயில்களிலே ஈ ஓட்டிண்டு இருக்கா அர்ச்சகாள்! மரியாதை ஏது? வருமானம் ஏது? இந்த இலட்சணத்திலே அரிஜனன் தான் வரட்டுமே அர்ச்சகன் வேலைக்கு, கூடை கூடையாக இலாபமா வரப்போறது. அந்தக் காலம் மலையேறிப்போச்சு.

ர:- போதும் சும்மா, இருமய்யா! எப்போதும் பணம்! பணம் ஒண்ணுதானா நோக்கம்.....

சி: ஆஹாஹா! பணம் நோக்கம் இல்லாமப்படிக்கு, வேறென்ன ஓய், கவலைக்குக் காரணம், சாஸ்திரம் கெட்டுப்போகும், என்பதா! சொல்பவா சொன்னாலும் கேட்பவாளுக்கு மதி வேண்டாமா! சாரதா சட்டம், தேவதாசி சட்டம், ஆலயப்பிரவேச சட்டம், பலதாரதடைச் சட்டம் என்று இப்படி அடிமேல் அடி விழுந்ததே, அதனாலே கெடாத சாஸ்திரம், அரிஜனங்களை அர்ச்சகர்களாக்குவதாலா, கெட்டுப் போகும். வீணான பீதி, ஓய்! வீண் பீதி!!

★

தித்திக்கும் தமிழில்!
புத்தம் புதிய ஓவியங்கள்!!

வெண்ணிலா

[அரிய நாவல் அற்புதக் கற்பனை]

புழுதி மேடு

[தாழ்ந்த தாயகத்தைச் சித்தரிக்கும் சரிதச் சித்திரங்கள். கங்கையிலிருந்து காவிரி வரை!—கருத்து மணக்கும் எழிலேடு.]

'திராவிடநாடு' துணை ஆசிரியர்
அரங்கண்ணல்
தீட்டியவை

—:விபரங்கட்கு:—
அன்புப் பதிப்பகம்,
பொறையார், :: தஞ்சை மாவட்டம்.

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 31—7—55 [இதழ் 4

"எம்மதமும் சம்மதம்!"

எம்மதமும் சம்மதம்! பல்வேறு ஆறுகள் வெவ்வேறு இடத்திலே ஓடினாலும் முடிவில் கடலில் கலப்பதுபோல, பல்வேறு மார்க்கங்களை மக்கள் தழுவிக்கொண்டிருப்பினும், எல்லா மார்க்கங்களும் மக்களை ஆண்டவனுடைய சன்னிதானத்துக்குத்தான் கொண்டுசேர்க்கும்!!

இது தத்துவம்!! தாராளமாகப் பேசி விடுகிறார்கள்!!

ஆனால் நடைமுறை இவ்விதமாகவா இருக்கிறது? குன்றக்குடி அடிகளார் இப்போது குட்டுப்பட்டு இதை உணர்ந்திருக்கிறார்.

"சைவசமயப் பாதுகாப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் மட்டுமல்ல என் தொண்டு, நான் சைவன் சந்தேகமில்லை, ஆனால் என் பணி, எல்லாச் சமயங்களுக்கும் 'ஜீவனாக' விளங்கும் ஆத்தீகத்துக்கு அரண்செய்யும் அரும் பணியாகும், ஆகவே சைவமெய்யன்பர்காள்! வைணவப் பெரியோர்களே! விவிலிய வேதமுணர்ந்த கிருத்தவப் பெருந்தகையீர்! இசுலாமிய மார்க்கத்து மாமணிகாள்! நமக்குள் ஓர் ஒற்றுமை வேண்டும்! மிகமிக வேண்டும்! இன்றேவேண்டும்! இனிதே வேண்டும்!!"-என்பதாகத்தானே அடிகளார் பேசிவருகிறார், செல்லுமிடமெல்லாம் தலமாகக்கொண்டு.

தஞ்சைத் தரணியில் ஓரூர் சென்றார்—சிற்றூர்—அங்கு அவர் பேருரை நிகழ்த்த விழைந்தார் — அடிகளார் சைவராயினும், இன்று இங்குள்ள மசூதியில் உபதேச உரை நிகழ்த்தினால் நல்லது என்று சிலர் கூறினர். செங்கரும்பின் சாறென இனித்தது சிலருக்கு. அங்ஙனமே ஆகுக! என் சைவம் எதற்கும் இடம்தரும்! சைவம் என்பது ஒழுக்கம், உயர்தனிப்பண்பு, ஆன்மநேய ஒருமைப்பாடு, என்பதனை எடுத்தோதும், எல்லோரும் வாரீர்! இறைவனருள் தேடிட ஒன்று சேரீர்!—என்று கூறலானார். "ஐயா! சைவம்!! நிறுத்து!!" என்று இஸ்லாமியப் பெரியோர் சிலர் கூறினர். அடியார் தயங்கினார். இது முசுலீம் மார்க்க போதனைக்காரரின் புனித மன்றம், இங்கு மதத்தின் பெயரால், எதை வேண்டுமானாலும் பேசிடலாம் என்று கூறுதல் அழகுமல்ல, அறமுமாகாது, ஆத்தீகத்தின் பெயரால் இந்த முறையற்ற செயல் நிகழவிடமாட்டோம் என்றனர். முருகா! என்றார்—பெருமூச்சாகக் கிளம்பிற்று! எத்துணை அருமையான வாய்ப்பு என்றெண்ணி இறும்பூதெய்தி நின்றேன், என்னென்ன கூறத் திட்டமிட்டேன், எல்லாம் மண்ணாயினவே, விடை ஏறிடும் வித்தகா! நீ விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று எண்ணினார், இடத்தை விட்டகன்றார்!

எம்மதமும் சம்மதம், தத்துவம். நடைமுறை? அது முற்றிலும் வேறு வேறு!!

சாமான்யர்களிடம் மட்டும்தான் முரண்பாடு உளதோ என்றால், பெரிய இடங்களில் நெளிகிறது, சர்க்கார் போக்கிலேயும் இது குழைந்துகிடக்கிறது.

பழங்குடி மக்களுக்குச் சில சலுகைகள் உண்டு—ஆனால் எதுவரையில்? —இந்துவாக இருக்கும் வரையில்!! மதம் மாறினால், சலுகை கிடையாது. என்ன பொருள் இதற்கு? எம்மதமும் சம்மதம் என்பதா?

தலைமுறை தலைமுறையாக அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு, விரட்டப்பட்டு மிதிக்கப்பட்டு நொந்து கிடக்கும் பழங்குடி மக்களுக்கு, அவர்களின் வாழ்விலே, உயர்சாதி வெறியர்களின் போக்கினால் ஏற்பட்டுக் கிடக்கும் வளைவு போக்கப்படுவதற்காக, சலுகைகள் செய்து தருவது சர்க்கார் திட்டமானால், அந்தச் சலுகை, அவன் இந்து மதத்தைவிட்டு வேறு மதம் புகுந்ததும், நிறுத்தப்படுவானேன். எம்மதமும் சம்மதம் என்றல்லவா உபதேசம் செய்கிறார்கள். ஆண்டவன் அருள் பெற சங்கு சக்கரமும், உருத்திராட்ச வில்வமும் துணை செய்வது போல பிறையும் சிலுவையும் துணை செய்யும் என்பதுதானே இந்த தத்துவத்தின் பொருள்! இவ்வளவு தாராளமாகத் தத்துவம் பேசிவிட்டு, காரிய மாற்றும்போதுமட்டும் நீ இந்துவா? என்று ஏன் கணக்குப் பார்க்க வேண்டும்.

இதே அநீதியான முறை பாஞ்சாலத்தில் இருக்கிறது.

பெருமையாகக் கூறிக்கொள்கிறார்கள், சீக்கியர்களுக்கும் எமக்கும் வேறுபாடு ஏதும் கிடையாது என்று. வகுப்புக் கலவரம் போன்ற நெருக்கடியின் போது, மார்தட்டிக்கூடப்பேசுகிறார்கள் சீக்கியர்கள் எமது சிப்பாய்கள்! என்று. ஆனால் அங்கே என்ன நடைபெறுகிறது? பழங்குடி மக்கள், சீக்கிய மார்க்கத்தில் சேர்ந்துவிட்டால், சர்க்கார் அரிஜனங்களுக்குத்தரும் சலுகை கிடையாது!!

பத்துப் பதினைந்து எம். எல். ஏக்கள், ஐந்தாறு எம். பி-க்கள் உட்படப் பத்தாயிரம் வீரர்கள் சிறைக்கோட்டம் புகுந்திடும் வகையில் நடைபெற்ற அகாலி அறப்போருக்கான காரணங்களிலே இதுவும் ஒன்று.

மத்திய சர்க்கார் அரிஜனங்களுக்கு அளிப்பதாகக் கூறும் சலுகைகளை, அவர்கள் சீக்கிய மார்க்கத்தில் சேர்ந்து கொள்வதற்காக நிறுத்தக்கூடாது என்பதும் கிளர்ச்சி நடாத்தியோரின் கோரிக்கைகளிலே ஒன்று.

பகதூர்சிங் எம். பி. என்பார், தற்காலிகத் தலைவராக இருக்கிறார் அகாலி தளத்துக்கு—அவர் தமக்கு நேரிட்ட அனுபவம் ஒன்றை எடுத்துக்காட்டி இடித்துக் கேட்கிறார். ஆகுமா இந்த அக்ரமம் என்று.

1950-ல், அவர் அரிஜன மந்திரி ஒருவரை அணுகி, தமக்கு ஏதேனும் ஓர் வேலை தரவேண்டும் என்று வேண்டினாராம் — மந்திரியார் "உனக்கெப்படித் தரமுடியும், நீ சீக்கிய மார்க்கத்திலே அல்லவா இருக்கிறாய்" என்று சொன்னாராம்.

இந்து மார்க்கத்திலே இருந்தால் மட்டுமே சலுகைகிடைக்கும் என்பது நடைமுறையாக இருக்கும்போது, ஏன், எம்மதமும் சம்மதம் என்று நாப்பறை அறைய வேண்டும்? நாணயம் இருக்கலாமே, எதற்காக நயவஞ்சகம்! துணிவுடன்செய்யட்டுமேஅக்ரமத்தை? ஏன் முக்காடிட்டுக்கொண்டு செய்கிறார்கள்! கட்டழகியின் அணைப்பும் வேண்டும், அது, காலை மலர்ந்ததும் உலகுக்குத் தெரிந்துவிடாமலும் இருக்கவேண்டும் என்று எண்ணிடும் காவிக் காமுகன் செயல் போலல்லவா இருக்கிறது. எம்மதமும் சம்மதமாம்! உண்மையாகவா! இந்த உதட்டசைவு உபதேசம், நடைமுறையின்போது, தேய்ந்து மாய்ந்து போகிறதே!!

★

விற்பனையாளர்கள் கவனிக்கவும்

—★—

அதிக பிரதிகள் வேண்டும் விற்பனையாளர்கள், புதன் கிழமைக்குள் எமக்குத் தகவல் தரவேண்டும். கூடுதலாகும் பிரதிகளுக்கான 'டிபாசிட்' தொகையையும் அனுப்பிவைக்க வேண்டுவது அவசியம்.

நிர்வாகி,
'திராவிடநாடு'

தம்பி,

உச்சி முதல் உள்ளங்கால்வரை ஒரே புளகாங்கிதமடையலாம்-வீரத் தமிழனின் பழைய வரலாறு மீண்டும் ஓர்முறை காணும் வாய்ப்பு நேரிடும், கோட்டை கொத்தளங்கள் தூளாகும், கொடிமரங்கள் பெயர்த்தெறியப்படும், முரசு கொட்டுவர், சங்கம் ஊதுவர், பாவாணர் வெற்றிப் பண் இசைப்பர், திருமதிகள் 'திருஷ்டி' கழிப்பர், மக்கள் தெந்தினம் பாடுவர், ஆகஸ்டுப் போரின் அலாதியான அருமை கண்டு என்று எவ்வளவோ மனப்பால் குடித்தேன், இப்படி ஒரேயடியாக என்னையும், அவரை நம்பிக் கிடக்கும் ஆயிரம் ஆயிரம் வீரர்களையும் நட்டாற்றில் விட்டுவிடுவார் என்று துளியும் எண்ணவில்லை; எனினும் என்ன செய்வது, தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது ஆகஸ்ட்டுப் போராட்டத்தை நிறுத்திவிட்டார்.

என்னைக்கூடச் சேர்த்துக்கொள்வதாகச் சொன்னார்—அழைப்பு வருமென்று எதிர்பார்க்கவேண்டாம், சேருக! சீர்பெறுக! என்றார், நானும் நீயும் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் அவர் கூறிடும் எல்லைப்போர் நடைபெறட்டும், தமிழரின் தொல்லை ஒன்றுக்கு முடிவு தெரியட்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். பிடிமண் அள்ளிப் போட்டுவிட்டார், செங்கோலார்.

தக்க காரணம் உண்டு கேண்மினோ! என்றும் அறிக்கைவிடுகிறார்.

நேரு பண்டிதரிடமிருந்து அவருக்குக் கடிதம் வந்திருக்கிறதாம்—கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று என்னைக் கேட்காதே தம்பி, அவரே கூறவில்லை. இரகசியம் இருக்குமல்லவா! பாரதத்தின் தலைவரும் தமிழ்மாநிலத்தின் தலைவரும் நடத்திக்கொள்ளும் கடிதப் போக்குவரத்து என்ன சாதாரணமாகவா இருக்கும், நம்மைப்போன்ற சாமான்யர்களுக்குக் கூற! ஏதேதோ இருக்கும். நேரு பண்டிதர் கெஞ்சி இருக்கக்கூடும் கொஞ்சி இருக்கக்கூடும்—எல்லைக்கு ஒரு போரா? ஏனய்யா தலைவரே! அதற்காக ஒரு குழு வேலை செய்ய இருக்கிறதே தெரியுமா? என்று கேட்டிருக்கலாம். என்ன இருக்கிறதோ கடிதத்தில், தெரியாது—கடிதம் பெரிய இடத்தது—எனவே விஷயம் பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்று அனைவரும் எண்ணிக்கொள்வார்கள் என்று ம. பொ. சி. நம்புகிறார், மறுத்தீர்களோ, தமிழின்மீது ஆணையிட்டுவிடுவார்!

எப்படியோ ஒன்று, காண்போரும் கேட்போரும் மயிர்க்கூச்செறியும்நிலை பெற இருந்த மகத்தான வாய்ப்புப்போய்விட்டது—ஆகஸ்ட்டுப் போர் நிறுத்தப்பட்டுவிட்டது.

இவருடைய போர்ப் பிரகடனம், பிறகு அதை நிறுத்திவிட்டதாகத் தரும் அறிவிப்பு, இதைக் கவனிக்கும்போது, தஞ்சையில் மாணவத் தோழர்கள் நடத்திய கிளர்ச்சி என் நினைவிற்கு வருகிறது.

மாணவர்கள் அங்கு ஒரு தலைமை ஆசிரியர் சம்பந்தமாகக் கிளம்பிய பிரச்சினைக்காகக் கிளர்ச்சி செய்தனர்; இப்போது கிளர்ச்சி நிறுத்தப்பட்டிருக்கிறது — காரணம், மாணவர்களின் கோரிக்கையைக் கவனித்து, குறையினைக் களைந்துவிடுவதாக, ஊர்ப் பெரியவர்கள், பல கட்சிகளிலும் உள்ள பிரமுகர்கள் —கடிதம் கொடுத்து அல்ல— பொதுக்கூட்டம் போட்டு வாக்களித்தனர்—தங்கள் கிளர்ச்சி பலன் தந்தது என்று மாணவர்கள் கிளர்ச்சியை நிறுத்திவிட்டனர்.

ஆகஸ்ட்டுப் போராட்டத்தை அன்பர் சிவஞானம் நிறுத்திவிட்டாரே, அத்துடன், மாணவர்கள் தமது முயற்சியில் வெற்றிபெற்ற தன்மையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட போர் அறிவிப்பாளர்களுடன் கூடி இருப்பதைக் காட்டிலும், மாணவனாக இருப்பது எவ்வளவோ மேலானது என்று உனக்குத் தோன்றுகிறதல்லவா—எனக்கு அவ்விதம்தான் தோன்றுகிறது, தம்பி.

தம்பி, இதைவிட மகத்தான முறையிலே அகாலிகள் கிளர்ச்சி நடத்தி வெற்றிபெற்றுள்ளனர்—பதினாயிரம்பேர் சிறை புகுந்தனர் —நாலைந்து M.P.க்கள் பத்துப்பன்னிரண்டு M. L. A.க்கள் — இவர்களை நடத்திச் செல்ல தாராசிங் எனும் முதுபெரும் கிழவர். தடை உத்தரவை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தப்பட்டது — தடை உத்தரவை சர்க்கார் 'வாபஸ்' பெற்றனர், கிளர்ச்சி நிறுத்தப்பட்டது—தாராசிங்கோ இன்னும் சிறையிலேதான் இருக்கிறார். அகாலிகள் நடாத்திய இந்த அரும்பெரும் போராட்டம் பற்றி அதிகம் தெரிந்திருக்காது நமது மக்களுக்கு—தாராசிங் பாஞ்சாலத்தில் இருக்கிறார் — அவருடைய போர் குறித்து இங்கு முழக்கம் செய்ய எந்த இதழும் இல்லை!

நமது நினைவெல்லாம் ஈர்த்திடத்தக்க வகையிலே, இரு கிழமைகளாக இங்கு புயலென வீசி வருவது, பெரியாரின் ஆகஸ்ட்டுக் கிளர்ச்சிதான்.

இந்தக் கிளர்ச்சி எந்த வகையில் உருவெடுக்கும் என்று கூறிடும் நிலை, மெல்லிய கோடுகளே தெரிவதால், இப்போதைக்கு, (அதாவது நான் உனக்குக் கடிதம் தீட்டும் போது) இல்லை. உன் கருத்து இக்கடிதத்தில் பதியும் நேரத்தில், பெரியாரின் கிளர்ச்சி, எந்தக் கட்டத்தை அடைகிறது என்பது தெரிந்துவிடக்கூடும்.

(13-ம் பக்கம் பார்க்க)

மக்கள் கரமும் மன்னன் சிரமும்

கிராம்வெல்.

சார்லஸ்.

மார்க்கத் துறையிலே, மன்னன் வற்புறுத்திய முறைகளை ஏற்க, ஸ்காத்லந்து மக்கள் பிடிவாதமாக மறுத்துவிட்டனர். ''என் ஆணைக்கா எதிர்ப்பு'' என்று மன்னன் ஆர்ப்பரித்தான். ''எமது கொள்கையை இழக்க மாட்டோம்'' என்று மக்கள் முழக்கமிட்டனர். மன்னன், ''போர்'' என்றான், மக்கள், ''தயார்'' என்றனர்! மன்னன் தான் தயாராக முடியவில்லை, பணமில்லை!!

ஆண்டொன்றுக்கு 935,000 பவுன் தேவை என்றனர் படைத்தலைவர்கள். 30,000 பேர் வீரர்களாவது தேவை, மலைவாசிகளான ஸ்காத்லந்துக்காரரை முறியடிக்க! இந்தப் பெருந்தொகையைப் பெறுவது எங்ஙனம்? பழைய சங்கடம் மீண்டும் தலைதூக்கிற்று. சூள் உரைத்துவிட்டான் மன்னன், ஸ்காத்லாந்துக்காரரை அடித்து நொறுக்கி அறிவு புகட்டுவதாக; பணம்? மன்னன், திண்டாடினான்.

அங்கே, ஸ்காத்லந்தில், தாயகத்தைக் காக்க வீரப் படை திரண்டுவிட்டது. பல ஆண்டுகள், ஸ்வீடன் நாட்டிலே போர்ப்பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்கிய லெஸ்லி என்பான், தாயகத்துக்கு ஆபத்து என்பதறிந்து வெளிநாட்டிலிருந்து, தாயகம் வந்து சேர்ந்தான், தணலென்று ஆகிவிட்டது, வீரம்; எண்ணற்ற வீரர்கள்! எதற்கும் அஞ்சாத துணிவு! மக்கள், பெண்டிர் உட்பட, படையெடுப்பை முறியடிக்கக்கூடிப் பணியாற்றினர்.

ஸ்கார்த்லந்து நாட்டுப் பிரபுக்களில் ஒருவர், ஹாமில்டன்—இவர் சார்லஸ் சார்பில்.

இவர் ஒரு பிரிவுப்படையுடன் ஸ்காத்லந்து செல்வது என்றால், வேறோர் பிரிவு வேறு பக்கமிருந்து செல்வது என்றும் ஏற்படலாயிற்று. ஹாமில்டன் சென்றார், தாயகத்தின் போர்க்கோலத்தையே கண்டார்! காலடி எடுத்து வைத்தால் சுட்டுக் கொன்றுவிடுவேன் என்று வீரமும் நாட்டுப் பற்றும் வீறிட்டெழும் உள்ளத்துடன் கூறிக்கொண்டு, கையில் துப்பாக்கியுடன் காட்சி தந்தார், ஹாமில்டனின் அன்னை.

ஓடினான் மன்னனிடம், விபரீதமாகிவிடும், வேண்டாம் இச்சமர், பகையை விடுக, என்று மன்றாடினான், மன்னன் மயங்கினான்—சமரசப் பேச்சுக்கு இடமளித்தான். ஆனால், வென்ட்ஒர்த் விடவில்லை; தூண்டினான்; ஒரு கை பார்த்தே ஆகவேண்டும்; ஸ்காத்லந்து மக்களுக்கு இப்போது பணிந்துவிட்டால், நாளை பிரிட்டிஷ் மக்களும் கிளம்பிவிடுவர், எனவே சமரிட்டே ஆகவேண்டும் என்று வலியுறுத்தியதுடன், மாமன்றத்தைக் கூட்டி, போர் இருக்கும் காரணத்தைக் காட்டி, பணம் பெறலாம், என்று யோசனை கூறினான். பேழையைத் திறந்தால் பெரும் பொருள் கிடைக்கும் என்று மன்னனிடம், வென்ட்ஒர்த் கூறினான். ஆனால் அந்தப் பேழையில் இருந்தது என்ன? வஞ்சம் தீர்த்தாகவேண்டும் என்ற உறுதி காட்சி அளித்தது.

சி.என்.அண்ணாதுரை.

மக்கள் சார்பாகப்பேசி, வீடெல்லாம், நல்லோர் நெஞ்சகமெல்லாம் நிரம்பியிருந்த பிம் ஆளும் முறையாக அமர்ந்தான் மாமன்றத்தில்; நாட்டைக் கலக்கிய வழக்குகளை நடாத்திய ஹாம்டன் அரச வழக்கறிஞர்களைத் திணறடித்த அறிவாற்றல் மிக்க, செயின்ட் ஜான், அனைவரும் மாமன்றத்தில், தேர்தல் மூலம் உறுப்பினராயினர்! மன்னனுடைய கோபத்துக்கு ஆளானவர்களை மக்கள் மலர்மாரி பொழிந்து வரவேற்கிறார்கள். மாமன்றம் கூடிற்று, மன்னனுக்கு முடிவுகட்ட! பதினோராண்டுகள் மாமன்றம் கூட்டாமலேயே ஆளமுடியும் என்று எண்ணியிருந்த சார்லஸ், நெருக்கடி நேர்ந்ததும், மாமன்றத்தைக் கூட்டித்தான் கரைசேர வேண்டும் என்று எண்ணினான்—இஃதொன்றே போதாதா மாமன்றத்தின் வலுவை விளக்கிட, என்று மக்கள் கூறிக்கொண்டனர். பதினோராண்டுகளாக நடைபெற்ற எதேச்சாதிகார அடக்கு முறை ஆட்சி, மாமன்றத்தின் முன்பு விசாரணைக்குவந்து நிற்கும்! மக்களைக் கசக்கிப் பிழிந்து, சிறையில் தள்ளி, வெளிநாடுகளுக்குத் துரத்தி, சித்திரவதைசெய்து, ஆட்சி தன் நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்தது. மக்கள் பயந்தனர், பணியவில்லை! அடக்கு முறை தலைவிரித்தாடிற்று, எனினும் அடிமை மனப்பான்மை ஏற்பட்டுவிடவில்லை. அஞ்சாநெஞ்சினர், சரண்புகுந்து வாழ்வதை, சாவைவிடக் கொடியது என்று கருதினர்—எலியட்டுகள் எத்தனை! லில்பர்ன்கள் பலப்பலர்! இவர்களுக்கு ஆட்சியாளர் இழைத்த கொடுமைகளுக்கெல்லாம் பதில் கூறித் தீரவேண்டும். மாமன்றம் நோக்கிவருகிறான் மன்னன், திரு ஓடு ஏந்தியபடி! 'அவன் சிரத்தில் முடி இருக்கிறது, கரத்தில் சிறைக் கதவின் திறவுகோல் இருக்கிறது, அவரைச் சூழ இருக்கின்றன மக்களைக் கடித்துக் கொடுமை செய்யும் வேட்டை நாய்கள்! மன்னன், மாமன்றத்தை நாடுகிறான்! இந்த மன்றமின்றி ஆட்சி நடவாதோ! என்று ஏளனப் புன்னகையுடன் கேட்ட மன்னன் வருகிறான். ஸ்காத்லந்து மக்களால் கிளம்பியுள்ள கடும் போரை, லாட் அறிந்துள்ள வெறிச்செயலும், வெண்ட்ஒர்த்துக்குப் பழக்கமான அடக்கு முறையும் ஒழித்துவிடாது — மக்களின் ஒத்துழைப்பு வேண்டும், அதனைப் பெற்றுத்தர மாமன்றத்தால் மட்டுமே முடியும்! மன்னன் மாமன்றத்தை நாடுகிறான், மாமன்றம் மன்னராட்சி முறைபற்றி மக்கள் கொண்டுள்ள கருத்தை எடுத்துரைக்கும். மன்னன் தோல்விப்பாதையிலே காலடி எடுத்துவைக்கிறான், மக்களின் துணையின்றி பகைமுடிப்

பது முடியாது என்பதை உணருகிருன், கிள்ளுக்கீரையல்ல மக்கள், அரசுக்குப் பேராபத்து ஏற்படும்போது, அதைத் தடுக்கும் ஆற்றலைத்தர வல்லவர்கள்! அரசன் இதைச் சாதாரண நாட்களிலே ஏற்க மறுத்தான், ஸ்கரத்லந்து மக்கள் போரிடத் துணிந்தனர், உண்மையை உணர வேண்டியகட்டத்துக்கு மன்னன் வந்திருக்கிருன். வாழ்க ஸ்காத்லந்து மக்கள்! என்று கூறிப் பூரித்தனர் மக்கள். மாமன்றம் கூடுவதை, நாடு பெரியதோர் வாய்ப்பு என்று எண்ணியதில் தவறென்ன!

அடக்குமுறையினுல் உள்ளம் நொறுங்கிப்போயிருக்கும், பதினேராண்டுக் காலம் சட்டை செய்யாதிருந்ததால், மாமன்றத்தார் மனம் உடைந்துபோயிருப்பர், கேட்ட தொகை தரச் சம்மதிப்பர், போடும் வரியைக் கட்டும்படி மக்களுக்குக் கூறுவர், மேலும் நாடு போரில் ஈடுபட்டிருக்கிறது, ஸ்கத்லாந்துக்காரர் படைகொண்டு வருகின்றனர், பிரிட்டன்மீது பாய்கின்றனர், எனவே நாட்டைக் காக்கவேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, எவ்வளவு கஷ்டநஷ்டமும் ஏற்க மாமன்றம் இசையும், இந்த நேரத்தில், மன்னனுக்கும் மாமன்றத்துக்கும் முன்னம் மூண்டு கிடந்த பகையை மறந்துவிடுவர், நாட்டுப்பற்று வீறிட்டெழும், என்ற எண்ணம் கொண்டான் மன்னன்-அவன் உடனிருந்து, ஊறுதேடிய உலுத்தர்கள், இக்கருத்தினையே அவனுக்கு ஊட்டினர்- மாமன்றம் கூடுவது, காட்டிய இடத்தில் கையொப்பமிட அல்ல, பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்ததும் வெளிவரும் சிறுத்தை அது! வளைந்தும், சிறிது ஒடிந்தும், பிடி கழன்றும் முடி அற்றும் உள்ள போர்க் கருவிகள் கொண்ட படையைக் காணும், ஏமாளி, ''கருவிகளின் அழகு காணீர்! ஓட்டை ஒடிசல்கள்! இப்படை என்ன செய்யும்'' என்று எண்ணுவான், ஆனுல் கூர்த்த மதிபடைத்தோனே, ''இவர்கள் போர் பல கண்டவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், இவர்கள் கொண்டுவரும்படைக்கருவிகளே இதற்குச்சான்று'' என்று கண்டறிவான். அதுபோன்ற, சவுக்கடி பட்டவனும், சொத்துப் பறிகொடுத்தவனும், தொழுவத்தில் மாட்டப்பட்டவனும், துரத்தி அடிக்கப்பட்டவனும், பெரும் பொருள் அபராதம் கொடுத்தவனும், சிறையில் உழன்றவனும், மாமன்ற உறுப்பினரானதுகண்டு, ஆட்சியாளர் என்னென்ன செய்யமுடியும் என்று தெரிந்தவர்கள் இவர்கள், அல்லலை அனுபவித்தவர்கள், நெருப்புச் சுடும் என்பதைத் தெரிந்து கொண்டவர்கள் எனவே இவர்கள் மீண்டும் வாதிட்டுப் போரிட்டு அவதியை வரவழைத்துக் கொள்ளமாட்டார்கள், நல்லவர்களாகிவிட்டவர்கள், என்று மன்னன் எண்ணியிருப்பான்; உண்மையோ அது அல்ல, கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளும் உள்ளம் படைத்தவர்கள், எனவே எதற்கும் இனி இவர்கள் அஞ்சப்போவதில்லை என்பதுதான் உண்மை. இதை மன்னன் உணர முடியவில்லை துவக்கத்தில்.

மாமன்றம் கூடிற்று, மன்னன் சார்பில், போர்ச் செலவுக்காகப் பெருந்தொகை தேவை என்று எடுத்துக் கூறப்பட்டது. இதைக் கேட்டுக்கொள்ளவா, மாமன்றம் கூடிற்று. பதினேராண்டுகளாகச் சேர்ந்துள்ள பழங்கணக்கைக் கொண்டுவந்து, மாமன்றம், ஏடேடாகப் புரட்டி விவாதிக்கலாயிற்று. பிம், மாமன்றத்திலே, உரிமை பற்றி அரியதோர் சொற்பெருக்காற்றி, உணர்ச்சி வயத்தவராக்கினர், மாமன்றத்தை மட்டுமல்ல, மக்களையே! மக்கள் பணியிலேயே காலமெல்லாம் செலவிட்டு, சொந்த வாழ்க்கை நொடித்துப் போயிருப்பவர் பிம். அவருடைய வீர உரை, மாமன்றத்துக்குப் புது உறுதி தந்தது.

எலியட் சிறையில் மாண்டார்! மக்களுக்காக உழைத்த மாவீரனைச் சிறையில் தள்ளிச் சாகடித்தனர். இந்தப் பாதகப் படுகொலைக்கு என்ன சமாதானம் கூறமுன் வருகிருர்கள், ஆட்சியாளர்கள்.

கப்பல்வரி என்ற பெயரால் பெரும் பொருளை மக்களிடமிருந்து அடித்துப் பிடிங்கினுர்கள் ஆட்சியாளர்கள்—இந்த அக்ரமத்துக்கு என்ன சமாதானம்?

கப்பல் வரிகட்ட மறுத்த ஹாம்டன் மீது வழக்கு வழக்கிலே, மக்கள் உரிமைக்கும் நீதிக்கும் விரோதமாகத் தீர்ப்பளித்தனர் நீதிபதிகள்! நீதி இங்ஙனம் நெறி தவறுகிறது. இதற்கு என்ன சமாதானம்?

படை வீரரை, வீடுகளிலே கட்டாய விருந்தினராக்கும் முறையால் நேரிட்ட கொடுமைகளுக்கு என்ன பரிகாரம்? கண்ணீர் துடைக்கக் காவலன் முன்வருவானு?

வெளிநாடுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள் சார்பிலே, வெஞ்சிறையில் செத்தவர் சார்பிலே, அழுத கண்ணீருடன் நிற்கும் மக்கள் சார்பிலே, வீர மரணமடைந்த எலியட்டின் சார்பிலே, பிம் பேசினுர்—அல்ல, அல்ல, எழுச்சி பெற்ற மக்கள் முழக்கமிட்டனர்.

கூட்டியது பணம் கேட்க, இவர்கள் குற்றப் பட்டியலல்லவா தயாரிக்கிருர்கள். இவ்வளவு அல்லல் பட்டும் இவர்களுடைய துடுக்குத்தனம் பட்டுப்போகவில்லையே, என்று மன்னன் எண்ணினுன். கூடினேம், கணக்குக் கேட்க! பரிகாரம் தேவை! கப்பம் கட்டக்கூடவில்லை, கழுவாய் தேடும்படி கட்டளையிடக் கூடியுள்ளோம் என்று மாமன்றம் எண்ணிற்று.

பிரபுக்கள் சபைக்கும், பிம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்,

மக்களின் உரிமைகளை நசுக்கும் ஆட்சிமுறையைக் கண்டிக்க முன்வருக! மன்னனிடம் உள்ள கொடியவர்களை அகற்றிவிடும்படி அறிவுரை தருக! என்று பிம் கூறினுர்.

மன்னனே, ''பணம்! பணம்!'' என்று கேட்ட வண்ணம் இருக்கிருன்—ஆட்கள் அவசர அவசரமாக வருகிருர்கள், ''உரிமை பற்றிப் பிறகு பேசுங்கள், இப்போது பணம் தேவை'' என்கிருர்கள். ''முதலில் உரிமைப் பிரச்னை'' என்று உறுதியாக மாமன்றம் கூறிவிட்டது.

மன்னன் பிரபுக்கள் சபைக்குச் சென்ருன், மாமன்றத்தின் போக்கைக் கண்டித்தான், ''அந்த மதியிலிகளுடன் கூடி நீவிரும் பழாகாதீர், பெரும் போருக்குத் தேவையான பணம் கிடைக்க வழி செய்யுங்கள்'' என்ருன். பிரபுக்கள் மன்னனே நேரில் 'பிரசன்னமாகி'க் கேட்கும்போது, மறுப்பது கண்ணியமாகாதே என்று மழுப்பினர். மாமன்றம், ''இனம் இனத்தோடும் சேரும், வேறென்ன!'' என்றனர். நெருக்கடி முற்றும்போது, பிரபுக்கள் அரசன் பக்கம்தான் நிற்பர் என்று மக்கள் முடிவு செய்தனர்.

கப்பல் வரி செல்லுபடியாகக் கூடியதுதான் என்று அளிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்யவேண்டும் என்று மாமன்றம் கூறிற்று. மன்னன் அதை வேண்டுமானுல் செய்கிறேன், பணம் எவ்வளவு தருகிறீர்கள்? என்று கேட்டான். ''பணம் தருவதற்கும் அநீதியைத் துடைப்பதற்கும் முடிபோட்டுப் பேசலாகாது'' என்று மாமன்றம் கூறிற்று. கப்பல் வரி கட்ட முடியாது என்று வழக்காடிய ஹாம்டன் இருக்கும், மாமன்றம், மன்னனுடைய மிரட்டும் மொழிக்கோ, மயக்கு மொழிக்கோ இடம் அளிக்குமா! மன்னன், மாமன்றத்தை ஏன் கூட்டினேம் என்று ஆயாசப்பட்டான். முறிந்துபோகும் நிலை நன்ருகத் தெரியலாயிற்று, மன்னனுடைய கோபம் மேலும் வெடிக்கும்படி, மாமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று.

(தொடரும்)

வெண்புரு பறக்கிறது!

வானன்

சில நகரங்களுக்குத் தனி மகிமை உண்டென்று தல வழிபாடு செய்கின்றனர் பக்தர்கள்.

இன்று ஜினீவா நகரமோ, அரசியல் தலமாகி விட்டது!

இரண்டாண்டுகளுக்கு முன் அங்கே கூடிய பல நாட்டுத் தலைவர்கள் பெரிய தொரு குழப்பத்திற்கு முடிவு கண்டனர். உலக சமாதானத்திற்கே ஆபத்தை விளைவித்து, பெரும் போருக்கு ஆரம்ப இடமாகுமோ என்று எண்ணப்பட்ட இந்தோ சீனப் பிரச்னையை அந்த நகரத்திலே முன்பு கூடிய மாநாடு தான் தீர்த்து வைத்தது.

அந்த நேரத்திலே அங்கு சென்று கலந்து கொண்ட சீனப் பிரதமர் சூ-என்-லாய், மேற்கத்திய நாடுகள் கண்டு வியக்கு மளவு அரசியல் அறிவோடு ஆய்வுரைகள் பகன்று, இந்தோசீனாவின் உள்நாட்டுப் போருக்கு ஒரு வழி தேடிக் கொடுத்ததோடு, புது வாழ்வு பெற்ற செஞ்சீனாவின் சமாதான நோக்கத்தையும் தெளிவுப்படுத்தினார். சூ-என்-லாயின் அறிவுத் திறனையும், அவருடன் சென்ற சீன ராஜதந்திரிகளின் அடக்கத்தையும், கண்ட மேல்நாட்டு அரசியல் தலைவர்கள் சிகப்பான சைனாவைப் பற்றித் தங்கள் மனதிலே கொண்டிருந்த மாசுபடர்ந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டதோடு, சைனாவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்க்கும் நன்னாளை ஆவலோடு எதிர்பார்க்க ஆரம்பித்தனர். உலக வல்லரசுகளில் சைனா சேர்க்கப்பட வேண்டிய நாள் தூரத்திலில்லை என்பதை அன்று கூட்டிய மாநாடு உணர்த்தியது.

அதே ஜினீவாவில் சென்ற 18ம் தேதி நான்கு வல்லரசுகளின் தலைவர்களும் கூடிப்பேசினர். ரஷ்யத் தலைவர் புல்கானின் ஒரு புறமும் அமெரிக்கத் தலைவர் ஐஸனோவர், பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், பிரஞ்சு பிரதமர் பாரே ஆகியோர் ஒரு புறமும் அமர்ந்து ஆறு நாட்கள் பேசி இருக்கின்றனர். ரஷ்யத் தலைவர்களை மதிக்க மறுத்து, கேலி பேசி படை தயார் செய்து வந்தன மேற்கத்திய நாடுகள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதே மாதிரி முதலாளித்துவ நாடுகள் எங்களை அழிக்கப் பார்க்கின்றன என்று ரஷ்யாவும் படை திரட்டியது என்பதும் தெரியும்.

ஒருவரை ஒருவர் மதிக்க மறுத்து, பொதுவில் உலக மக்களை ஆபத்தில் சிக்கவைத்த இருநாட்டு அரசியல் தலைவர்களும் இன்று ஒன்று கூடினர்.

பொதுப் பணியில் ஈடுபடுவோர், மாற்றாரை மதித்து அவர்களோடு சமமாகப் பழகினால்தான் ஒன்றுபட்ட சக்தி மக்களுக்குப் பயன்படும்; இல்லையேல் பொது நலனுக்கு ஊறு செய்தவர்களாவோம் என்பதை உணர்ந்த வல்லரசுத் தலைவர்கள் பரஸ்பர அன்போடு ஒருவரை ஒருவர் சந்திக்க ஒத்துக்கொண்டு, உலகசமாதானத் திட்டம் தீட்டக் கூடினர் ஜினீவாவில்; குரோத மனப்பான்மையிலே படை வரிசைகளை அதிகரிப்பதைவிட, நேச மனப்பான்மையிலே ஒன்றுகூடி, பந்தியில் அடுத்தடுத்து அமர்ந்து, வேடிக்கையும், விகடமும் பேசி, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அதன்பின் அன்பின் வழிசெல்ல அந்தத் தலைவர்கள் முடிவு செய்தனர். இந்த நாகரிகமான வழியைப் பின்பற்ற, அரசியல் ஸ்தலமான ஜினீவா பேருதவி செய்திருக்கிறது, சமாதானத்துக்கு வழிவிட்டு, போரை விரட்டிவிட ஏற்பாடு செய்திருக்கிறது, அங்கே நடந்த நால்வர் மாநாடு!

பத்து ஆண்டுகளாக வளர்ந்து வந்த பயங்கர சூழ்நிலை அகல வழி பிறந்துவிட்டது.

அன்று ஹிரோஷிமாவிலே போடப்பட்ட அணுக்குண்டு, மனிதனின் கோரச் செயலுக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

அணுகுண்டைவிட ஆயிரம் மடங்கு ஆபத்தான நீர்வளிக் குண்டு எங்களிடம் உண்டு என்று அமெரிக்கர் கூறியபோது, ஆபத்து எந்த நேரத்தில் வருமோ என்ற அச்சம் வந்தது.

நீர்வளிக் குண்டு எங்களிடமும் உண்டு என்று ரஷியா திருப்பிக் கூறியபோது, அதைவிட ஆபத்தான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டது உலகம் என்பது தெரிந்தது.

நீர்வளிக் குண்டுகளைப் பரீட்சை செய்து பார்த்ததிலேயே ஆயிரக் கணக்கான மக்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளானார்கள்; பலர் இறந்தும்பட்டார்கள்; சில பூபாகங்களில் சீதோஷ்ண நிலையே பாதிக்கப்பட்டது என்ற செயதிகள் கிடைத்தபோது, இனி உலகம் எப்படி வாழும் என்ற கேள்வி ஒவ்வொருவர் மனதிலும் எழாமலில்லை.

ஆறாண்டுகள் போரிட்டு ஹிட்லரைத் தோற்கடித்த சமாதானப் பிரியர்கள், பத்தாண்டுக் காலத்திற்குள் அந்த அமைதிக்கு உலை வைப்பதோடல்லாமல், உலகத்தையே அழித்துவிடுவார்களோ என்ற பயம் அதிகரித்தது.

பூமியின் பெரும் பகுதியை அழிக்கும்!

பூபாகத்தின் சீதோஷ்ண நிலையையே மாற்றிவிடும்!

காற்றில் நஞ்சு கலந்து ஜீவராசிகள் வாழமுடியாத நிலைமை ஏற்படலாம்!

நாற்பத்தெட்டு மணி நேரத்தில் நியூயார்க் நகரமே அழிந்துபடலாம்!

அதைவிடக் குறைவான நேரத்தில் மாஸ்கோ தூளாக்கப்படலாம்!

இப்படிப்பட்ட நீர்வளிக்குண்டுகள்!

இரும்புத் திரைக்குள் இருப்பவர்கள் எங்கள் சுதந்திரத்தைப் பறிக்கப் பார்க்கிறார்கள் என்று ஒரு பக்கமும், முதலாளித்துவ நாடுகள் தொழிலாளிகள் ராஜ்யத்தைக் கலைக்கப் பார்க்கிறார்கள் என்று மற்றோர் புறமும் பேசப்பட்டது. இவர்களிருவரிடமும் நீர்வளிக் குண்டுகள்! கோடிக்கணக்கில் பட்டாளம்; போர்க்காலத்தைவிட அதிகமான அளவில் படை தயாரிப்பு!

இரண்டு பக்கத்திலேயும் அணிவகுத்து முரசுகொட்டி நின்ற இந்தப் பெரும் வல்லரசுகளுக்கிடையே உலகம் தத்தளித்தது.

பத்து ஆண்டுகள் பலதடவை கூடிப் பேசிய ஐ. நா. சபை முடிவைத் தரவில்லை. நிலைமை பயங்கரமாகிக்கொண்டே இருந்தது.

பொழுது விடிந்தால் சமாதானம் உலகத்தில் இருக்குமா என்ற ஐயப்பாட்டோடு கண் விழிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது.

நல்ல காலம் பிறந்தது. வாழ்விக்கும் நேரம் வந்தது. ஜினிவா நகரிலே நாலு வல்லரசுகளின் தலைவர்கள் கூடினர்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் நான்கு வல்லரசுகளின் தலைவர்கள் நேரில் சந்தித்திருக்கின்றனர்,

முரட்டுத்தனமும், பிடிவாதமும் கொண்டவர்கள் என்று கூறப்பட்ட ரஷ்யத் தலைவர்கள் மிகத்தாராளமாகவும், விட்டுக்கொடுக்கும் மனப்போக்கோடும் ஜினிவா மாநாட்டில் கலந்துகொண்டனர். போலீஸ் அரண்களுக்கிடையே கிரம்லின் மாளிகையில் துப்பாக்கி முனைகளால் மூடப்பட்ட அறைகளில் வாழ்பவர்கள் என்று சொல்லப்பட்ட ரஷ்யத் தலைவர்கள் மேல் மூடி இல்லாத கார்களில் ஜினிவா நகர வீதிகளில் உலாவினார்கள் என்றும், சந்திக்கிறவர்களோடெல்லாம் வேடிக்கை, விளையாட்டு, கேலி பேசிக்கொண்டு பொழுது போக்கினார்கள் என்றும் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அதேமாதிரி ரஷ்ய கம்யூனிசத்திற்கு பயந்து, அந்த நாட்டவர்களின் நண்பர்களுக்குத் தெரிந்தவர்கள் என்றால்கூட, அவர்களை நம்ப மறுத்து, தொல்லைகள் தந்த அமெரிக்காவின் தலைவர் ஐஸனோவரை, "ரஷ்யத் தலைவர்களுடைய சமாதான எண்ணத்திலே எனக்கு சந்தேகமேயில்லை" என்று கூறுமளவு செய்துவிட்டது ஜினிவா. "ரஷ்ய படைகள் நம்மை அழித்துவிடும்" என்று பயந்து அதற்கு எதிராகப் படை திரட்டிய ஐஸனோவர், அதே ரஷ்யப் படை, பாதுகாப்பு மந்திரி ஜீகோவ்க்கு விருந்தும், மணமான அவர்மகளுக்கு ரேடியோவும், பேனாவும் அன்பளிப்புகள் அளித்திருக்கிறார்!

இரண்டு துருவங்களுக்கு வேகமாக செல்லும் இந்த இருமுகாம்களும் ஒன்றுகூடுமா என்று பயந்து கிடந்த மக்களுக்கு நம்பிக்கை யூட்டி இருக்கிறது ஜினிவா மகாநாடு.

அந்த மாநாட்டிலே எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயங்கள் எதுவும் முடிவுக்கு வரவில்லை. ஐக்கிய ஜெர்மனி ஏற்படுத்த என்ன வழி, ஐரோப்பிய பாதுகாப்புக்கு மார்க்கம் எது, போர்த்தளவாட உற்பத்தியை எப்படிக் கட்டுப்படுத்துவது போன்ற பல முக்கிய விஷயங்களைப் பற்றி பேசப்பட்டதே தவிர முடிவு எதுவும் வரவில்லை. வரவும் முடியாது. பத்து ஆண்டுகளாக வளர்ந்து வந்த ஆபத்தான சூழ்நிலையை ஒரே வாரத்தில் போக்குவது முடியாத காரியம். ஆனால் ஜினீவா ஒரு முடிவைக் காட்டியது. வல்லரசுத் தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்ததின் மூலம், தாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி வாழலாம் என்ற நம்பிக்கையோடு வீடு திரும்பினர் என்பதை. தலைவர்களிடையே மதிப்பையும், மரியாதையையும் ஏற்படுத்தி இருக்கிறது- இந்த எண்ணமே, உலகத்தைப் பேராபத்திலிருந்து காப்பாற்றும், இந்த சந்திப்பு வந்து கொண்டிருந்த பெரும் போரை நீண்ட தூரத்திற்கு விரட்டி இருக்கிறது. இதே நிலை இன்னும் சில ஆண்டுகளுக்கு நீடித்தால்கூட, உலகம் உய்ய வழிகிடைக்கும். நால்வர் மனம் மாறியது, நாட்டுக்கு நல்ல காலம். மக்கள் மனத்துயர் விட்டு சந்தோஷமாகக் காரிய மாற்றச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விஞ்ஞானம் வீணர்களின் விபரீத விளையாட்டுகளில் ஆட்டக் காயாகாமல், வித்தகர்களின் ஆய்வுச் சாலையில் பண்படுத்தப் பட்டு, நல்வாழ்வுக்கு அடிகோலும் சமாதானம் உலகத்தை உய்விக்க வழி செய்திருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளை ஏற்படுத்திய ஜினிவா மாநாடு சரித்திரத்திலே ஒரு பொன் ஏடு. உலக வரலாற்றிலே புதிய சகாப்தத்தைத் துவக்கும் மகாநாடு. நால்வர் மகாநாடு புதியதோர் காரியத்தை நடத்தாவிட்டாலும், நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்தியதற்காக முக்கியத்துவம் பெறுகிறது.

இன்று, காட்டிலே வெண்புரு பறக்கிறது; அங்கே வேடனில்லை, அதை அம்பு எய்து கொன்று வீழ்த்த!

★

ஒரே கட்சியில்!

—[]—

"ஒரு மாதத்தில் ரூ 250க்கு மேல் செலவு செய்கிற எவரும் சோஷலிச எதிரிகளாவார். அவர்கள் பிறர் வாழ்க்கைப் பங்கைப் பிடுங்கும் பாதகத்தையும் செய்கிறார்கள்."

—தேபர் (காங்கிரஸ் தலைவர்)

*

"வருஷத்தில் நமது கவர்னருக்கென எட்டு லட்ச ரூபாய் மட்டுமே, செலவு செய்கிறோம். இது சென்னை —பம்பாய்—மாகாணங்கள் தங்கள் கவர்னர்களுக்கென செலவு செய்வதைவிடக் குறைவு. அதிகாரிகளுக்கு ஏன் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்று கேட்கிறார்கள்- அது, தவறு. அந்த அதிகாரிகள். வேறுயாராவது முதலாளிகளிடம் போயிருந்தால் இதைவிட அதிகம் சம்பாதிக்கலாம். அதை விட்டுவிட்டு சர்க்காரிலிருக்கிறார்களே, அதை யோசியுங்கள்!"

—கோபாலரெட்டி (ஆந்திர முதல்வர்)

*

"நாங்கள் வாங்கும் சம்பளம் எங்கள் செலவுகளுக்கே போதவில்லை. தெரியுமா? மந்திரியென்பதால், சுகமாகயிருப்பதாக ஒரு எண்ணம் மக்களிடம். எங்களிடத்தில் இருந்துபார்த்தால் தெரியும்."

—சி. சுப்ரமணியம்
(முதலமைச்சராக முயன்றவர்)

பாங்காங் பங்கஜா

(சில கற்பனைக் காட்சிகள்)

–1–

இடம்:—'பஞ்சவடி'

இருப்போர்:—குமுதம், சுப்பி.

நிலைமை விளக்கம்:—[இருபத்தைந்து வயதான எழில் மங்கை குமுதா.

நாகரீக உடையில் காணப்படுகிருள்.

சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு, படங்கள் நிறைந்த ஏதோ ஒரு ஆங்கிலப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிருள்.

ரேடியோவில் 'இசை' மெல்லக் கேட்கிறது.

சுப்பி, முப்பது வயதுள்ளவள்; ஏழை; நல்ல உடற்கட்டும் சுமாரான கவர்ச்சியும் உள்ளவள்; வீட்டு வேலைக்காரி.

கையில் பர்மா கூட்டுக்கோலுடன் வருகிருள்.

அவள் வந்ததைக் கண்ட குமுதா, கால்மேல் காலைத் தூக்கி வைத்துக்கொண்டு, பேசுகிருள்.

ஹாலில் காணப்படும் படங்களை மாறி மாறிப் பார்த்துக்கொண்டே சுப்பி பதிலளிக்கிருள்]

*

குமுதம்:- ஏண்டி! சுப்பி! எங்கேயோ உன் புருஷன் சொல்லாமப்படிக்கு ஓடிவிட்டானுமே! கேள்விப்பட்டேன். ஏதாவது தகவல் தெரிஞ்சுதா......

சுப்பி:- ஆமாங்கம்மா! நேத்துத்தான் கடுதாசி வந்திச்சி, அது, யாருகிட்டவும் சொல்லிக்காமலே ஓடிச்சி — என்னமோ ஏதோன்னு பயந்துகிட்டு கிடந்தேன்...நேத்துத்தான் கடுதாசி போட்டுச்சி...அந்தமான்லே இருக்குதாம்......

குமுதம்:- அந்தமானுக்காபோயிட்டான்......போயி......?

சுப்பி:- இங்கே இருந்து பலபேர் அங்கே போகிருங்களாம், கெவுர்மெண்டு அவங்களுக்கு நஞ்சையும் புஞ்சையும் எனுமாக் கொடுக்குதாமே......

குமுதம்:- அதிர்ஷ்டக்காரிதான் நீ, நிலம் கிடைச்சுதா, உன் புருஷனுக்கு......எத்தனை ஏகர்?

சுப்பி:- நீங்க ஒண்ணு! என் புருஷனுக்கு நிலமாவது நிரானது! கெவர்மெண்டு நிலத்தை பெரிதெருவு புள்ளே இருக்காரே அவருக்குக் கொடுத்துதாம்...அதிலே இவருக்கு வேலை......

குமுதம்:- அப்படியா......

சுப்பி:- அந்தக் கூலி வேலையை இங்கே செய்துகிட்டு, கூழோ தண்ணியோ குடிச்சிகிட்டு இருக்காமே, அதோட கோணப் புத்தியைப் பாரம்மா, எங்கேயோ ஒரு கண்காணுத தீவுக்கு ஓடியிருக்குது.

–2–

இடம்:—'பஞ்சவடி'

இருப்போர்:—குமுதம், சுப்பி, பங்கஜம்.

நிலைமை விளக்கம்:—பங்கஜம், இருபத்திரண்டு வயதுள்ள வசீகரமான மங்கை.

குறுகுறுப்பான கண்கள், அழகுக் குழி விழும் கன்னங்கள், கொடிபோன்ற உடல்.

அதிக ஆடம்பரமின்றி உடுத்திக்கொண்டிருக்கிருள்.

ஹாலுக்குள் அவள் நுழைந்ததும், சுப்பியும் குமுதமும் பேசுவதை நிறுத்திவிடுகிருர்கள்.

சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்தோடிச் சென்று பங்கஜாவின் கரங்களைப் பிடித்திழுத்து, அவளை அணைத்தபடி, ஒரு நாற்காலி அருகே அழைத்துச்சென்றுகொண்டே குமுதம் பேசுகிருள்.

சுப்பி வெளியே போய்விடுகிருள்]

*

குமுதம்:- அடா, அடா! என்ன இது அத்திபூத்ததுபோல...வாடி, வாடி பங்கஜம்......!

பங்கஜம்:- அத்தியும் பூக்கல்லே ஆலும் பழுக்கல்லே...........நான் முன்னே வந்திருந்தேன், உன்னுடை தரிசனம்தான் கிடைக்கல்லே.......

குமுதம்:- கேள்விப்பட்டதும், நேக்கு மனசுக்கு ரொம்ப வருத்தமா இருந்தது......ஜெமீன்தார் வீட்டுக் கலியாணத்திலே உன்னுடை பரத நாட்டியம்தான் பிரமாதம்னு, ஊரே பேசிக்கறது......

பங்கஜம்:- எதிரே இப்படிப் பேசுவே—என் தலை மறைஞ்சதும், கேலி செய்வே......அது கிடக்கட்டும்.........கலியாணத்திலே என் டான்சு இருக்கறது உனக்குத் தெரியுமோ இல்லையோ......

குமுதம்:- மன்னிச்சுக்கோ.........பங்கஜா டான்சுன்னு கல்யாணப் பத்திரிகையிலே போட்டிருந்தது...நான யாரோன்னு எண்ணிண்டேன் ......ஒரு வாரத்துக்குப் பிறகுதான் அவர் சொன்னுர் என்னடி உன் பிரண்டு பங்கஜாவோட் டான்சாமே வேதபுரம் ஜெமீன் வீட்டுக் கல்யாணத்திலேன்னு. பிற்பாடு எடுத்துப் பார்க்கறேன், பங்கஜான்னு போட்டு, சின்ன எழுத்திலே சாமா ஐயரோட பொண்ணுன்னு எழுதியிருக்கு......

பங்க: அவ்வளவு தாண்டி உன் சிநேகம். காலேஜிலே கட்டிப் புரள்றது...பிறகு ஒரே அடியா மறந்துவிடறது..........பணக்காராளோட சிநேகமே அப்படித்தான்......

குமு:- ஏண்டி, நான் ஊரிலே இருந்தா. உன்னுடை டான்சுக்காகவாவது அந்தக் கல்யாணத்துக்கு வந்திருக்க

மாட்டனே!! கலியாண பத்திரி கையை நான் பார்த்ததே, கல்கத்தாவில்! உன்னோட டான்சு நடந்திண்டிருக்கச்சே நான் பாங்காங்கிலே இருந்தேன்......

பங்:- எப்போ, திரும்பிவந்தே?

குமு:- வந்து பத்துநாளாறது...... அவரோடு உத்யோகம் பார்க்கறவர் ஒருத்தர், உபேந்திரர்னு பேர், உதயபூர் அவரோட ஊர், அவர் ஒரு நாலு நாளைக்காவது தன்னோட பங்களாவிலே வந்திருக்க வேணும்னு வற்புறுத்தினர்......... மன்னிச்சுடுங்கோ இன்னொரு சமயம் ஆகட்டும்னு சொல்லிவிட்டு, பிளேனிலே புறப்பட்டுவந்து விட்டேன்......தசராவுக்கு எப்படியும் மைசூர் போகனும்—கேசவ ஐயங்கார் பொண்ணு தெரியுமேல்லோ கஸ்தூரி, அவளுக்கு சத்யம்செய்து கொடுத்துவிட்டேன். அதனாலே தான், அவர் கோவிச்சிண்டா கூடப் பரவாயில்லேன்னு, பாங்காங்கிலே இருந்து புறப்பட்டு வந்து சேர்ந்துட்டேன்.........

பங்க:- அவர் இப்ப, எங்கே இருக்கார்?

குமு:- இப்ப, அவர் ஹாங்காங் போயிருப்பார்!

பங்க:- என்னமோ, போடி! நீங்க தான், பர்மாவும் பாங்காங்கும் ஹாங்காங்குமா பறந்து போறதும் வரதுமா இருக்கிறிங்க......ஒரு துளிப் பிரயோஜனம் உண்டோ எங்களுக்கு.........சம்பளம் உங்களுக்கு நிறையக் கிடைக்கும்.........வேறே என்ன......

குமு:- உனக்கு என்னோட சகாயம் எப்பவும் உண்டு.........இப்ப, பாரு. அவர் ஹாங்காங்கிலிருந்து திரும்பியதும் சொல்லி......

பங்க:- அவர் ஹாங்காங்கிலிருந்து திரும்பியதும், நீ அவருக்குச் சொல்லி, எனக்குச் சாதிக்கிற காரியம் இருக்கட்டும்.........அவர் அங்கே இருக்கறபோதே ஒரு உபகாரம் செய், பார்ப்போம்......

குமு:- என்னடி செய்யனும், சொல்லு......

பங்க:- என்னோட டான்சு ஏற்பாடு செய்யச் சொல்லு — ஹாங்காங் —பாங்காங்—செய்கோன்—ரங்கோன் ......இங்கு......

குமு:- பேஷாச் செய்யலாம்...... இதிலே என்ன தடை? அவர் இப்போ, அதே இலாக்காவிலே தான் வேலே பார்க்கருர்......

பங்க:- டான்சுக்குன்னு ஒரு இலாகாவே இருக்கா?

குமு:- சீ, அசடு! டான்சுக்குன்னு அல்ல! பலதேசத்தாளும் ஒண்ணு பழகினுத்தானே உலகத்திலே சமாதானம ஏற்பட்டு சுபீட்சம் இருக்கும் என்கிற நோக்கத்துக்காக, கலாச்சாரக் கூட்டுறவு இலாகான்னு ஏற்படுத்தி இருக்கா— அவர் இப்ப அதிலேதான் டைரக்டர்.

பங்க:- இதுதாண்டி சரியான சான்சு, என்னோட திறமையை உலகுக்குக் காட்ட......என்னோட திறமை கூட கிடக்கட்டும்......பரத நாட்டியத்தோட பெருமையை உலகத்துக்குக் காட்ட......

முகு:- நேக்கும் அதிலே பெருமை தானேடி. என்னோட காலேஜ்மேட், பங்கஜா, பாங்காங், ஹாங்காங், இங்கெல்லாம், 'டான்சு' ஆடினு, எல்லோரும் பார்த்து ஆனந்தப்பட்டா, பாராட்டிப் பேசினுன்னு கேள்விப்படும்போது, நேக்குப் பெருமையாத்தானே இருக்கும்... ஆனு, என்னோட ஆத்துக்காரர் இருக்காரே அவர் ஒருமாதிரி...... ரொம்பச் சபலம்......

பங்க:- ஏண்டி, குமுதா! ரொம்ப வாய்த்துடுக்கடி உனக்கு. உன்னோட ஆத்துக்காரருக்குச் சபலம்னு என்னேடு சொன்னு, என்ன அர்த்தம்......?

குமு:- சிச்சீ, அசடு! நான் உனக்காகச் சொல்லலே......உன்னைத் தானே அவருக்குப் பார்த்தாளாம், முதல்லே......நீ போயி, அவரை மயக்கிவிடுவேன்னு நேக்கு ஒண்ணும் பயமில்லே......அவர் சபல புத்திக்காரராச்சே.......பரதநாட்டியம் ஏற்பாடு செய்யச்சொல்லி நானே யோசனைகூறினு, அதையே சாக்காக வைத்துண்டு, அவர் ஸ்டார்கள் பின்னேடு போயிட்டா, என்ன செய்யறது என்கிற பயம் தான்......

பங்க:- போடி போக்கிரி! எந்த ஸ்டாராலும், உன்னைப் போல, மயக்க முடியாது......

குமு:- நேக்கும் அந்தத்தைரியம் எப்போதும் உண்டு....சரி....ஆகட்டும்......இன்னக்கே எழுதறேன்... ஆமாம் அப்பா என்ன சொல்லுவார், தூரதேசம் போகச் சம்மதிப்பாரோ......

பங்க:- தூரதேசமானு, என்ன, அப்பா ஒண்ணும் கர்நாடகமில்லே! இதைக் கூடாது என்கிறதுக்கு, அவரே ஐரோப்பா போகனும், அங்கே வேதாந்திகள் சங்கத்தோட மாநாடு நடக்கறதுன்னு சொல்லிண்டிருக்கார்......

குமு:- அப்படியா! சரி! இப்ப என்னடி தூரதேசம்னு ஒண்ணு இருக்கா! மைலாப்பூருக்கும் திருவல்லிக்கேணிக்கும் போயிட்டுவர்ர மாதிரி ஆகிவிட்டிருக்கு, லண்டனுக்கும், பாரிசுக்கும் போறதும், வர்ரதும்...நம்மவீட்டு வேலைக்காரி இருக்கா பாரு, சுப்பி.......அவபுருஷன் இப்ப எங்கே இருக்கான் தெரியுமோ! அந்தமான் போயிருக்கான்!!

—3—

இடம்:—சாலை

இருப்போர்:—காத்தான், முத்து,

நிலைமை விளக்கம்:—[காத்தான், நாற்பது வயதானவன்; முரட்டுத்தனமான தோற்றமுள்ளவன்.

முத்து, ஐம்பது வயதினன்; வேதனைகளைத் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டவன்.

இருவரும், பாளைக்கயிறு திரித்துக்கொண்டே பேசிக்கொண்டிருக்கிருர்கள்]

*

காத்தான்:- இருக்கட்டும், அண்ணேன், இருக்கட்டும்......செல்லன் எத்தனை காலத்துக்குத்தான் அந்தமானு தீவிலே இருந்து குப்பைகொட்டப்போருன்னு நானும் பார்த்துப்புடறேன்....

முத்தன்,- அட, போவட்டும், விட்டுத் தொலேடா, காத்தான். என்னமோ, குடி வெறியிலே ஏதோ செய்துவிட்டான்......

காத்:- என்ன செய்ய நினேச்சான் தெரியுமேல்லோ அந்த அயோக்யன்......

முத்:- ஆமா...விவரமாச் சொன்னுத்தான் எனக்குப் புரியுமா....... பைத்யக்காரன்........புல்லுக்கட்டு தூக்கிகிட்டுப் போறபுள்ளெயை அவன் சவுக்குத்தோப்புக்கு எதுக்குக் கூட்டிகிட்டுப் போக நினேப்பான்...இதைக் கூடவா புரிஞ்சிக்க முடியாது...

காத்:- என்ன சொல்லி கூப்பிட்டிருக்கான் தெரியுமோ, ஏ! புள்ளே! அதோ அந்தப் பக்கம் இருக்கற சவுக்குத் தோப்புலே, சாரையும் சர்ப்பமும் புரளுது, வா காட்டறேன்னு கூப்பிட்டிருக்கான்.... அவ ஒரு ரெண்டாங்கெட்டான்...

எங்கேண்ணேன்...வா பாக்கலாம்னு, ஓடி இருக்கா...

முத்:- அட, விட்டுத்தள்ளப்பா, என்னமோ, அதே சமயமா நீ அந்தப்பக்கம் போனே அவனுக்குச் சரியான பூசை விழுந்தது...கன்னியம்மா தயவு......ஆமா, நீ எப்படி அந்த நேரத்திலே அங்கே இருந்தே...

காந்:- அட, ஒரு வேலையாப் போயிருந்தேன்...

மு:- அட ,சொல்லேண்டாப்பா...

கா:- நானு,...அது ஒரு ரகசியம் ....

மு:- பார்த்தாயா...ரகசியம் எனக்குத் தெரியாதுன்னு நினேச்சிகிட்டு — பேசறே. காத்தான்! எல்லாம் எனக்குத் தெரியும் ...பச்சை...

கா!- அட, போண்ணேன்......... அந்தப்பாவி முண்டைக்காகத்தான் போயிருந்தேன்.....

மு:- பச்செ...உம்! எனக்குத் தெரியும்......எங்கே, காணோம் அந்தக் குட்டியை...

கா:- பச்சையும் அவபுருஷனும் வடக்கே எங்கேயோ பெரிய சமுத்திரம்போல ஏரி வெட்டறுங்களாம், அங்கே வேலை செய்யப் போயிட்டாங்க...

மு:- சமுத்திரமுமில்லா, கடலுமில்லா...டாமு...டாமுன்னு அணை கட்டறது...நான் ஆறுமாசம் போயிருந்தேனே அந்தவேலைக்கு...

கா:- ஏண்ணேன், கூலி நிறைய கொடுக்கறுங்களா......

மு: கூலிகொடுக்கருங்க...ஆனு..,

கா:- ஆனு, என்னண்ணே!

மு:- என்னேப்பாரேன் புரியுது! உடம்புஒரே அடியாப்பாழாயிடுத்து ...நம்ம கஷ்டத்துக்குத் தகுந்த போஷாப்பு கிடைக்கிறதில்லே... இங்கே, ஏதோ ஒண்ணு, கிடைச்சுடுது—அங்கே கொஞ்சம் கஷ்டம் ...அதுதான்...

கா:- எங்கேயும்தான் கஷ்டமிருக்கு...

மு:- அப்படிச் சொல்லிட முடியுமா...இப்ப எங்க ஐயர் இருக்காரே பெரிய டாக்டரு...அவர் கிட்டே, ஊர்லே இருக்கிற பெரிய மனுஷனுங்க, காரிலே வர்ராங்க..... எதையோ சொல்ருங்க, எதுவோ கொடுக்கருங்க, ஒரு சர்டிபிகேட் கொடுக்கருரு, தேவையான சரக்கு வாங்கிச் சாப்பிட சர்க்கார்லேயே அவங்களுக்கு சான்சு கிடைச்சுடுது.....எல்லாம் பணம் உள்ளவங்களுக்கு எல்லாம் நடக்குது எதுவும் கிடைக்குது.....

கா:- ஏண்ணேன்! டாக்டர் ஐயாவோட, தங்கச்சி வந்திருக்காங்களாமே; அவங்க எந்தெந்தச் சீமை எல்லாமோ போயிவந்திருக்காங்களாமே......

மு:- ஆமாம்......அந்த அம்மாவோட புருஷனுக்குப் பெரிய உத்யோகம், அஞ்சு ஆருயிரம் சம்பளமாம்...இப்பஎங்கேயோ, சைனுவோ ஜப்பானே போயிருக்காரு...

கா:- அவங்களும்தான் வெளிதேசம் போருங்க, நம்ம ஆளுங்களும்தான் போருங்க....

—4—

இடம்:—'பஞ்சவடி' தெருப்பக்க அறை.

இப்போர்:—டாக்டர் தாதாச்சார், ரங்கவடிவேலு (பிறகு) குமுதா பங்கஜா.

நிலைமை விளக்கம்:—டாக்டர் தாதாச்சார் நாற்பத்தைந்து வயதானவர்—ஆனல் இளைஞர்போல உடுத்திக் கொண்டிருக்கிருர்.

மருந்து வகைகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன அலமாரியில்.

அலங்கார ஆசனங்கள் போடப்பட்டுள்ளன.

உரத்த குரலில் பேசுவதும், அடிக்கடி காரணமின்றிச் சிரிப்பதுமாக உள்ள சுபாவக்காரர்.

ரங்கவடிவேலு நாற்பது வயதானவர்; வியாபாரி; தந்திரமாகப் பேசும் சுபாவம்.

இருவரும், எதிர் எதிர் சோபாவில் உட்கார்ந்து கொண்டிருக்கிருர்கள்.

டாக்டர் தாதாச்சார் சிகரட்டை ஊதித் தள்ளியபடி பேசுகிருர்.

*

ரங்கவடிவேலு:- டாக்டர் சார்! கிடைத்துவிட்டது பாஸ்போர்ட். தங்களுடைய ரிபோர்ட்டைப் பார்த்த பிறகு மந்திரியால் ஒரு தடையும் கிளப்ப முடியவில்லை.

டாக்டர் தாதாச்சார்:- சந்தோஷம்! நான் என்னுடைய ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ளடாக்டர்தான்,சிவிட்சர்லந்துதேசத்திலேயேபிரபலமானவர்—அவரிடம் நீங்கள் சிகிச்சை செய்து கொண்டால்தான் சொஸ்தம் ஏற்படும் என்று எழுதினேனல்லவா, அதற்கு எந்த மந்திரியும் மாறுனகருத்து கூற முடியாது.

ர:- ஆமாம்! பாஸ்போர்ட் கொடுத்துவிட்டு, வாழ்த்தியும் அனுப்பினுர் மந்திரி.

டாக்:- எப்போது புறப்பட உத்தேசம்.

ர:- அடுத்தமாதம், பதினைந்து—நாள் பார்த்திருக்கிறேன்......வீட்டிலே பெண்டுகளுக்கு ஒரே பயம் ....

டா:- என்னபயம்! நோய் என்ரு?

ரங்:- அதல்ல! அவர்களுக்கே தெரியும் நான் சிவிட்சர்லந்து போவது நோய் குணமாவதற்காக மட்டும் அல்ல என்பது. தூரதேசம் போவது பற்றி ஒருமாதிரி பயம்...

டா:- இந்தக் காலத்திலா அப்படிப் பட்ட பயம்!! நாள்தோறும் பத்திரிகையைப் புரட்டினுல் வெளிநாடுகளுக்கு நம்மவர்கள் போகிறசெய்தி ஒருபத்தாவது வருகிறது......பயம் என்ன இப்போதெல்லாம்......

ர:- தைரியம் சொல்லி இருக்கிறேன்...நீங்களும் ஒருதடவை வீட்டுக்கு வந்து சொல்லுங்கள்.

டாக்:- ஆஹா! வருகிறேன்...... வாடி, குமுது! இதோ என்சிநேகிதர் ரங்கவடிவேலு, துபாஷ், யூரோப் போகிருர்...என் தங்கை குமுதா.......இவ எங்கெங்கே போயிருந்தா கேளுங்கோ—கிழக்காசிய தேசம் பூரா போயிருந்தா...... சுகர்ணே தெரியுமாடின்னு கேட்டேன் ஒருநாள், அவரை நன்னுத் தெரியுமே டீபார்ட்டியிலே சந்திச்சிருக்கிறேன்...னு, சொல்ரு...... பலதேசம் போயிருக்கா... அவபுருஷன் இப்ப ஹாங்காங்கிலே இருக்கான்...... அவனுக்கென்ன யோக ஜாதகம், ஆமாம், நான்பேசிண்டே இருக்கனே.....யார் இது...பங்கஜா தானே...

கு:- ஆமாண்ணு! பங்கஜாதான் இப்ப பெரிய டான்சு ஸ்டார்...

டா:- அப்படியா.....எந்தப் படத்திலே நடிக்கிரு...

கு:- படத்திலே இன்னும் நடிக்கல்லே...இவளோட டான்சு பாங்காங் ஹாங்காங் இங்கெல்லாம் ஏற்பாடாறது....

டா:- பலே! பலே! இப்ப பரத நாட்டியத்துக்கு வெளிநாடுகளிலே ரொம்பக் கிராக்கி...,

ர:- ஆமாங்க! நம்ம மாம்பழத்துக்கு என்ன என்கிறிங்க....ரொம்ப ரொம்ப கிராக்கிங்க வெளிநாடுகளிலே....

பங்கஜா:- வெளிநாடுகளிலே பரத நாட்டியத்துக்கு மவுசு இருக்குன்னு; இங்கே இருக்கப்படாதுன்னு

அர்த்தமா? இங்கேயும் அதை கவுர விக்கவேணும்......

ர:- ஆமாம்......ஆமாம்......

டா:- எனக்கு ஒரு யோசனை தோணுறது......சொல்லட்டுமோ... நீங்கசுவிட்சர்லாந்து போறதுக்காக ஒரு 'பார்ட்டி'—அதிலே நான் உங்களுக்கு வாழ்த்துப்பத்திரம் தர்ரது ......அந்தப்பார்ட்டியிலே பங்கஜா டான்சு! எப்படி என் யோசனை......

குமு:- ஏ, ஒன்! முதல்தரமான யோசனை...

ர:- பேஷாச் செய்துடுவோம்...

குமு:- பாங்காங் புகழ் பரத நாட்டியக் கலா விலாசினி பங்கஜா நடனம்—எப்படி என்னுடைய வர்ணனை...போதுமாடி பங்கஜி...

ப:- போடி, நோக்கு எப்பவும் கேலிதான்...பாங்காங் போய் வந்தவா அல்லவா, அப்படி விளம்பரம் போடுவா.....

ர:- அதனுலே என்ன... பாங்காங் போகப் போறவா என்கின்ற முறையிலே, ஒரு பொருத்தம் இருக்கத் தானே செய்யுது

டா:- பலே! வக்கிலாகி இருக்க வேணும்நீங்க.........அப்ப அடுத்த ஞாயிற்றுக்கிழமை பார்ட்டி, பங்கஜா டான்சு......

குமு:- பாங்காங் புகழ்......!

டா:- ஓ! அப்படியே போடுவது, பங்கஜாவுக்குப் பணம் கிடையாது ......செலவுக்கு மட்டும்தான் தரப்படும். எல்லாம் அவர் சார்பில் நானே கூறிவிடுகிறேன்......செலவு தான் தரப்படும்...சார்! ஐநூறுக்கு ஒரு செக்......

ரங்:- வீட்டுக்குப் போய் பணமே கொடுத்தாப் போச்சி.........வர்ரிங்களா, நம்ம வீட்டையும் வந்து பார்த்த மாதிரி இருக்கும்......

பங்க:- ஏண்டி குமுதா! போய் வரவா......

குமு:- ஜமாய்த்துத்தள்ளடி.

–5–

இடம்:—இரு குடிசைப் பக்கமுள்ள மண்மேடு.

இருப்போர்:—சின்னன் மன்னர்.

நிலைமை விளக்கம்:—[ஒரு குடிசைக் குள்ளே இருந்து விட்டுவிட்டு அழுகுரல் கிளம்பியபடி இருக்கிறது.

மண்மேட்டில், மண் வெட்டி கூடையுடன் சின்னனும் மன்னரும் உள்ளனர்.

இருவரும் பாடுபட்டுப் பலன் காணதவர்கள் — பஞ்சைகள் வேலை செய்வதை நிறுத்தி விட்டுப் பேசுகிருர்கள்.]

*

சின்னன்:- என்ன, பொன்னன் குடிசையிலே ஒரே அடியாக் கதறிக் கிட்டு இருக்காங்க.

மன்னர்:- பொன்னன் பினங்கு போருனும், வீடுவாசலை விட்டுட்டு போருனே, எப்ப வருவானே என்ன மோன்னு, அழருங்க......

சின்னன்:- என்ன செய்யறது...... அவன் பினங்கு போயிட்டா, அந்தக் குடும்பத்தைக் காப்பாத்த ஆள் யாரும் இல்லே......

மன்:- அதாலே தான், பாவம், அவனோட அம்மா, அறுவது இருக்கும், ரெண்டு கண்ணும் தெரியாது, அழுவுது, தலைதலைன்னு அடிச்சிகிட்டு......அவன் சம்சாரம், பாவம், மூணு கொழந்தை......... குமுறுது......

–6–

இடம்:—மண்மேடு பக்கமுள்ள வீதி.

இருப்போர்:—காத்தான் முத்தன்.

நிலைமை விளக்கம்:—[காத்தான் தலையில் விறகுச் சுமையுடன் வருகிருன்.

முத்தன், ஒரு சைகிளைத் தள்ளிக்கொண்டு வருகிருன்.

இருவரும் சந்தித்ததும் பேசுகிருர்கள்.]

*

காத்:- அண்ணேன்! என்ன கோடிபங்களாவிலே ஒரே கொண்டாட்டம்.....டான்சு......பாட்டு......

முத்:- தெரியாதா உனக்கு...... ரங்க வடிவேலு இருக்காரே அவரு, எங்கேயோ சிவுசு சிமைக்குப் போருராம்—அதுக்காக விருந்து நடத்தருங்க......டான்சுகூட அதுக்குத் தான்.

கா:- டான்சுக்காரப் பொம்பளையை எங்கே இருந்து இழுத்துகிட்டு வந்தாங்க......

மு:- டேய்! டேய்! அப்படி எல்லாம் சொல்லாத டோய்! அது பெரிய இடத்துப் பொண்ணு...... அது கூடப்போவுது, வேறே ஒரு சிமைக்கு...டான்சு ஆடத்தான்...

கா:- எல்லோருந்தான் போருங்க வெள்ளி தேசத்துக்கு......

மு:- அட, நம்ம செல்லன் போயிருக்கானேல்லோ......

கா:- இவங்கள்ளாம் போற மாதிரியா அவன் போனன்........ அவன் அந்தமானுக்கல்ல போயிருக்கான்......

–7–

இடம்:—'சபர்மதி'—விழாக்கூடம்,

இருப்போர்:—ரங்க வடிவேல் டாக்டர் தாதாச்சார் பிரமுகர்கள் குமுதா. வேறு பல பெண்கள். புரபசர் பாண்டு மாணவன் மணி மற்றும் பலர்..

நிலைமை விளக்கம்:—மாலைகளை அணிந்து கொண்டு, மலர்ந்த முகத்துடன், ரங்கவடிவேலு ஆசனத்தில் அமர்ந்திருக்கிருர்.

பிரமுகர்கள் பலரும் மகிழ்ச்சி யுடன் உள்ளனர்,

குமுதாவும், டாக்டரும் நடனமாடும் பங்கஜாவைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைகிருர்கள்.

புரபசர் பாண்டு, நாட்டியத்தை மெய்மறந்து ரசிக்கிருர்.

மாணவன் மணி, ஆச்சரியத்தால் வாய்பிளந்த நிலையில் இருக்கிருன்.

நாட்டியத்தில் ஒரு கட்டம் முடிகிறது.

அனைவரும் 'கரகோஷம்' செய்கிருர்கள்.

புரபசர், மாணவனை அழைத்துக்கொண்டு வெளியே வருகிருர்.

விழாப் பந்தலுக்குச் சற்றுத் தொலைவிலே அழைத்துக் கொண்டுபோய்ப் பேசுகிருர்.]

*

புரபசர் பாண்டு:- டான்சு ஆடிய பெண் பாங்காங்கா?

மாணவன் மணி:- இல்லே, சார்! பக்கத்து ஊர்தான்......பங்கஜா....

புரோபசர்:- பாங்காங் என்கின்ற பெயர் வரக்காரணம்?

மணி:- பாங்காங்கிலே நடைபெறப் போகும் நடன விழாவிலே இந்தியாவின் சார்பாக பங்கஜா தான் போகிருர்.

புரோபசர்:- அப்படியா! ஓ! நம்ம நாட்டு, கலை வெளிநாடுகளிலே அவ்வளவு வரவேற்கப்படுகிறது........ நான், பங்கஜாவைப் பாராட்டிப் பேசுகிறேன்......

மணி:- நான் குறிப்பு எடுத்து, பத்திரிகைகளுக்கு அனுப்புகிறேன், சார்! பாங்காங் புகழ் பங்கஜா பற்றி.

★

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பி, இப்படி, போர்! போர்! என்ற முழக்கமும், போர் எப்படி எப்படி எல்லாம் இருக்கப்போகிறது தெரியுமா என்ற ஆர்வமூட்டும் அறிவிப்புகளும் கிளம்பி, என் உள்ளத்தை ஒரேயடியாகக் கிளர்ச்சி வயத்ததாக்கிவிட்டன.

பெரியாரின் ஆகஸ்ட்டுப்போரில் நாம் கலக்கவில்லை என்றாலும், போர்பற்றிய முழக்கம் கிளம்பியுள்ள இந்த வேளையில், என் மனமும் உன் மனமும் கூடத்தான், போராட்டங்களில் ஈடுபடும்வாய்ப்புகள் நமக்கெல்லாம் கிடைத்தபோது கண்ட அனுபவங்களைப்பற்றித்தானே எண்ணிடும்! இயற்கை அல்லவா!! நாம் திராவிடர் கழகமாக இருந்தபோதும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம், முன்னேற்றக் கழகமாகி வெளிவந்தபோதும் போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். எனவே,எங்கும் போர்! போர்! என்று பரணி பாடப்படும் நேரத்தில், பழைய நாட் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக மனத்திரையிலே பளிச்சுப் பளிச்செனத் தோன்றத்தான் செய்கிறது.

எனவே என் சிறை அனுபவங்களிலே சில உனக்குக் கூறுகிறேன்—உன் சிறை அனுபவத்தை எனக்குக் கூறிடுவாய், என்ற நம்பிக்கையுடன்.

அபிதான சிந்தாமணி

'நாலு மாதம்,' என்றார் மாஜிஸ்டிரேட்! நாலு மாதம்! என்று லேடி டாக்டர் கூறிடுவது கேட்டு மகிழும் ஆரணங்கு போலானேன். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி 1938—ஆச்சாரியார் ஆட்சிக் காலம்—என் மீது, குற்றம் புரியும்படி தூண்டிவிடுதல், உடந்தையாக இருத்தல் எனும் குற்றங்கள் — வழக்கு நடைபெற்று, அன்று சென்னை எழும்பூர் கோர்ட்டில், நாலு மாதம் என்று தீர்ப்பளிக்கப் பட்டதும், கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்கும் உள்ளம் இவனுக்கு உண்டு என்று இயக்கமும், இயக்கத்தின்போக்கைக் கூர்ந்துகவனித்துக் கொண்டிருந்த பொது மக்களும் நல்ல தீர்ப்பு அளித்து விட்டனர்—பரீட்சையில் தேறி விட்டோம் என்றெண்ணினேன், விவரிக்க முடியாததோர் மகிழ்ச்சி — வெற்றி பெறுகிறோம் என்ற நம்பிக்கை.

சென்னைச் சிறையில் பெரியாருடன் ஒரே வரிசைக் கட்டிடத்திலே தங்கியிருக்க நேரிட்டதை ஒரு வாய்ப்பாகவே கொண்டேன்.

குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ செல்பவர்கள், உள்ளே நுழைந்ததும், தனக்கு வேண்டியவர்கள் அங்கு இருப்பது கண்டால், எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்—எனக்கு, உள்ளே நுழைந்ததும், "வந்து விட்டாயா? வா! வா! ஆறு எட்டா? நாலா மூன்றா?" என்று கேட்டபடி நண்பர்கள் என்னிடம் அன்புடன் வந்த போது, அது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

மகிழ்ச்சியைத் தொடர்ந்து அனுபவிக்க முடியவில்லை, காரணம் வீட்டை விட்டு இந்தக் கூட்டுக்குள்ளே வந்து விட்டோமே என்ற கவலையல்ல, போட்டுக்கொள்ளப் பொடியில்லை! என்ன செய்வேன்; உனக்குத் தெரியுமே, தம்பி! நான் அந்தக் கெட்ட பழக்கத்துக்கு ஆட்பட்டு அல்லற்படுவது: கடை வீதியா, சண்முகம் கொண்டுவா, அம்பாள் வாங்கிவா என்று சொல்ல! சிறை!!

என் சங்கடத்தை அறிந்து கொண்ட அடிகள் "இதுதானே வேண்டியது! இதோ" என்று கூறி ஒரு சிறு காகிதப் பொட்டலம் கொடுத்தார் — பொடி!! நெடி குறைந்துபோனதில்லை! பக்குவமாகத்தான் மடித்து வைத்திருந்தார்; ஆனால், காகிதத்தில் இருந்ததால் பொடி பதம் கெட்டுக் கிடந்தது— எனினும் எனக்கிருந்த பசி, அசல் சண்முகம் இதனிடம் என்ன செய்யும் என்று களிப்புடன் கூறச் செய்தது. இந்தப் பொடிப் பொட்டலத்தை நான் என்றுமே மறப்பதற்கில்லை. முதல் சிறை அனுபவம்—மூக்குப் பொடிக்கே அலைய நேரிட்டது முதல் அனுபவமல்ல!!

நாலு மாதமும் நாங்கள் அங்கு, தமிழ்! தமிழ்! தமிழ்! என்ற உணர்ச்சி வயமாகி இருந்துவந்தோம், பெரியாருடன் பன்னிரண்டு மணி நேரம் (இரவில்தான் தனித் தனியாகப் போட்டுப் பூட்டி விடுவார்களே) ஒன்றாக இருக்க, பேச, கேட்க, பழக அருமையான வாய்ப்பு. இரசமான விருந்து. சுவையுள்ள காலமாக அந்த நாலு மாதங்கள் இருந்தன.

சிறை செல்கிறேன் என்பதறிந்த என் கெழுதகை நண்பர் புலவர் அருணகிரிநாதர், அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும், பல்வேறு விஷயங்களைப் படிக்க இது தூண்டுகோலாக இருக்கும் என்று கூறி, என்னிடம் அபிதான சிந்தாமணி எனும் புத்தகம் கொடுத்திருந்தார். அவர் உனக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கக் காரணமில்லை, தம்பி, பொது வாழ்வுத் துறையிலே துவக்கக் கட்டத்தில் எனக்குற்ற தோழராக இருந்தவர்—அவரே ஒரு அபிதான சிந்தாமணி—மணிக் கணக்கில் பேசிக்கொண்டே இருப்போம், பலப்பல விஷயங்களைக் குறித்து. எல்லா விஷயங்களைப் பற்றியும் ஏதேனும் ஓரளவுக்குக் கூறும் வகையான கல்வியும் கேள்வியும் படைத்தவர் — எனவே அவர், சிறையில் என்னோடு இருப்பது போலவே எனக்குத் தோன்றிற்று, அபிதான சிந்தாமணியைப் படிக்கும் போதெல்லாம். அந்த 'அபிதான சிந்தாமணி'யை நான் மறப்பதற்கில்லை. இப்போதும் 'அபிதான சிந்தாமணி'யைக் காணும்போதெல்லாம், எனக்கு அந்த நாலு மாதக் கடுங்காவல் நினைவிற்கு வரும்; நினைவிலே அந்தச் சம்பவம் தோன்றியதும், எனக்குள்ளாகவே ஓர் மகிழ்ச்சி, கொள்கை! கொள்கை! என்று கொக்கரித்துக் கொண்டிருந்துவிட்டு, அடக்கு முறை கிளம்பியதும் ஓடிவிடும் 'கோழை உள்ளம்' இல்லை, அழைத்தார்கள அறப்போரில் ஈடுபட்டான், சிறைத் தண்டனை பெற்றான், என்ற எவ்வளவு குரோத எண்ணம் கொண்டவர்களும் ஒரு சமயமில்லாவிட்டால் மற்றோர் சமயம் சொல்லிக் கொள்வார்களல்லவா! முதல் சிறை அனுபவத்தின் மீது அபிதான சிந்தாமணி, இரண்டாவது முறை என்ன தெரியுமோ? கேளேன் அதையும்.

ஆலாபனம்

ஆச்சாரியார் கவர்னர்ஜெனரலாகிவிட்டார்; சென்னை வருகிறார் பவனிக்காக; கூண்டோடு பிடிபட்டு சென்னை சிறையிலே கொண்டு போய் வைக்கப்பட்டிருந்தோம் —1948ல்! நிர்வாகக் கமிட்டியினர் அவ்வளவு பேரும்—அதிக நாட்களில்லை—ஒரு வாரம்தான்! அதற்குள் ஆச்சாரியார், வந்தார், பவனி நடத்தினார், கருப்புக்கொடியை வெண்புறா பறக்கவிட்டுக் கொண்டு வானத்திலே வட்டமிடக் கண்டார், கட்டுக் காவல் பலமாக

இருந்தும், அத்தனையையும் துளைத்துக்கொண்டு சென்று சிலர் கருப்புக்கொடி வீசிடக்கண்டார். நாங்கள் உள்ளே இருந்தோம். பெரியார் இருக்கிறார்; சம்பத்து அதுபோது தான் ஆபத்தான டைபாயிட்டிலிருந்து விடுபட்டு, அவன் துணைவி கண்டு பரிதாபப் படத்தக்க (இப்போது பயப்படுவதாகக் கேள்வி! உருவம் கண்டு!!) நிலையில் எலும்புக் கூடாக இருக்கிறான். மற்றும் பலர் எல்லோரும்; குடும்பம்முழுவதும்; இருமி இளைத்து ஈளைகட்டிய நிலையில் இருந்த நமது மனதுக்குகந்த அழகிரிசாமி அண்ணன் உட்பட.

நானும் அழகிரி அவர்களும் அப்போது பக்கத்துப் பக்கத்து அறை.

இரவு நேரத்தில், எனக்கு விருந்து கிடைக்கும் — பக்கத்து அறையிலிருந்து.

"காணக் கண்கோடி வேண்டும்"— என்று ஆரம்பிப்பார் ஓரடி பாட! பலே! பலே! ஒன்ஸ்மோர்! என்று நான் இந்தப் பக்கத்து அறையிலிருந்து கூவுவேன்.

"தூங்கவில்லையா இன்னும்— அடே அப்பா! நீ தூங்கினால்தான் நான் பாட முடியும், நான் பாடுவதைக் கேட்டுவிட்டுக் காலையில் கேலி செய்ய நினைக்கிறாய்—இடங் கொடேன்" என்பார், "அண்ணேன்! உண்மையாக நன்றாகவே இருக்கிறது. கொஞ்சம் ஆலாபனையும் நடக்கட்டும்" என்பேன் — அழகிரி அவர்களின் ஆலாபனமும் அருணாசலக் கவிராயர் இயற்றிய கீர்த்தனையும் கிடைக்கும். இரண்டாம் முறையாகக் கண்ட சிறை அனுபவத்திலே எனக்குக் கிடைத்த இந்த ஆலாபனத்தையும் நான் எப்போதும் மறந்திட முடியாது. எப்படி முடியும், எவ்வளவு சுவை என்கிறீர்கள்—நித்த நித்தம்.

அலாதியானதோர் வகையான சுவை கிடைத்தது மூன்றாம் முறை சென்றபோது—இதுவும் சில நாட்கள்தான் — இந்தச் சுவை, ஆறு பிஸ்கட்டுகளால்கிடைத்தது, அதைக் கேட்கிறாயா தம்பி, கூறுகிறேன்.

ஆறு பிஸ்கட்டுகள்

"ஆறுநூறு அபராதம், கட்டத் தவறினால் நாலுமாத சிறைவாசம்" என்று தீர்ப்பளிக்கப்பட்டது; அபராதம் செலுத்தவில்லை, சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன், திருச்சியில்; எனக்குக் கிடைத்த வாய்ப்பு எப்படிப்பட்டது தெரியுமா தம்பி, பெரியாரும் அதே நாளில், அதேவிதமான தண்டனை பெற்று அதே சிறைக்கு வந்தார், இருவரையும் ஒரே போலீஸ்வானில்தான் ஏற்றிச்சென்றார்கள்

திராவிடர் கழகமாக இருந்தபோது இப்படித்தானே நடந்திருக்கும், இதிலே என்ன ஆச்சரியம் என்று சொல்லுவாய், தம்பி! இது, திராவிட முன்னேற்றக் கழகமாக நீயும் நானும் மாறின பிறகு நடைபெற்ற நிகழ்ச்சி—1949ல்!

'ஆரியமாயை' எனும் ஏடு தீட்டியதற்காக எனக்குச் சிறை.

"பொன்மொழிகள்" தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

திருச்சி கோர்ட்டாருக்கு இப்படி ஒரு காட்சியைக் காணவேண்டுமென்று ஆசைபோலும், இரண்டும் தனித்தனி வழக்குகள்; தனித்தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் 'தீர்ப்பு' மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது.

பிரிந்து நெடுந்தூரம் வந்துவிட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில், பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச்செய்து, வேடிக்கை பார்த்தது வழக்குமன்றம், போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து, ஒரே வானில் ஏற்றிச்சென்றனர்; அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டுவந்திருந்த சாமான்களைக் கணக்குப்பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்கமுடியாத சம்பவம்; எனக்கு உள்ளூரப் பயம்தான்!

கேள்விக் கணையுடன் நிறுத்திக் கொள்ளாமல், அன்புக் கணையையும் ஏவினால், என்னால், எப்படித் தாங்கிக்கொள்ள முடியும், என்றெல்லாம் அச்சப்பட்டேன், ஆனால் இடையிடையே ஒரு தைரியம் எனக்கு; பெரியார் அவ்விதமெல்லாம் எண்ணமாட்டார்—அவர் மனதில் அந்த அளவுக்கு விரோதத்தை வடித்தெடுத்துப் பாய்ச்சி விட்டிருக்கிறார், அந்த வித்தையிலே விற்பன்னர், எனவே, பயமில்லை என்றிருந்தேன்.

பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள், இங்கு சிறிது நேரம், அங்கு சிறிது நேரம், இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக் கொள்கிறோமா என்று. அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியே வர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும், நான் அறைக்கு உள்ளே சென்றுவிடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்!!

நாளையதினம் எங்களை விடுவிக்கிறார்கள்—முன் தினம் நடுப்பகலுக்கு மேல், ஒரு உருசிகரமான சம்பவம் நடைபெற்றது.

பெரியாருக்கு வேலைகள் செய்து வந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து, "ஐயா! தரச்சொன்னார்" என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்டுகள் கொடுத்தான். கையில் வாங்கியதும், என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின்மீது சென்றது.

மறுநாளே திடீரென்று 'விடுதலை' கிடைத்தது.

அந்த வேடிக்கையையும் கேள் தம்பி.

எங்களை விடுதலை செய்யப்போகிறார்கள் என்ற செய்தி, உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே, வெளியே தெரிந்துவிட்டிருக்கிறது, எனவே, எங்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே 'முஸ்தீபுகள்' செய்யத் தொடங்கி விட்டிருந்தனர். நமது கழகத்தார் முஸ்தீபுகளிலே மும்முரமாக ஈடுபட்டு, நேரத்தை மறந்துவிட்டனர்; எனவே சிறைக்கதவு திறக்கப்பட்டு எங்களை வெளியே அனுப்பியதும், வாசற்படி அருகே, பெரியாரை அழைக்க வந்தவர்கள் கொண்டுவந்த 'மோட்டார்'தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர்; இது போதாதென்று, 'போட்டோ' எடுப்பவர் ஒருவர் ஓடிவந்தார்—இருவரும் அப்படியே, நெருக்கமாக, நில்லுங்கள் என்று, போட்டோ எடுப்பவர்களுக்கே உரித்தான சாமர்த்தியத்துடன் கூறி, போட்டோவும் எடுத்துவிட்டார்; அது வெளியிடப்படவில்லை; வெளியிடாதிருந்தது நல்லதுதான் என்றே சொல்லுவேன், அவ்வளவு

திகைப்பு என் முகத்தில் இருந்தது, அவர் எப்படி இருந்தாரோ, எனக்குத் தெரியாது. வேதாசலம் அவர்கள் வீடுவரையில் சென்று, அவர் இறங்கிக்கொண்டார், நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்.

கவனித்தாயா, தம்பி, எனக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தை.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு தனி அமைப்புக்குப் பெரியதோர் ஆபத்து, இந்தப்பத்து நாட்கள், என்று நண்பரொருவர் கூறினர். உண்மைதான். நான் அவ்வளவு சுலபத்திலே மனதைக் கரையவிட்டுவிடுபவன்தான்—ஆனல் பத்து நாட்கள் அவருடன் பேசி, மீண்டும் பழைய நேசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னைத் தட்டித்தட்டி அழைத்தபோதும் நான் அந்தச் சபலத்துக்கு இடம் கொடுக்காமலிருந்தேன். காரணம் கிராதகன் என்பதல்ல, நான் ஒரு அமைப்புக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டுவிட்டதால், நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும், அந்த அமைப்பை உருக்குலைக்கக் கூடியதாக இருக்கக்கூடாது என்ற நேர்மையான எண்ணத்தினுல்தான்.

நாலு சாக்லெட்!

மும்முனைப் போராட்டத்திலே ஒரு நாள், எனக்கு நண்பர் குருசாமியுடன் சேர்ந்து சிறையில் இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் சிறையில் கீழ்வரிசை அறையிலே தங்கியிருந்தார்—நான் தம்பிகளுடன் மேல் அறையில், மாடியில்! பார்! பார், இதிலே கூடக் கீழ்மேல் பேசுகிருன் என்று கூறிவிடப் போகிருர்கள் தம்பி, குருசாமிக்கு அப்போது உடல் நலம் இல்லை, எனவே மாடி ஏறவில்லை, அந்த ஒரே நாளில் எனக்குச் சுவையானதோர் அனுபவம்—அதையும் நான் மறப்பது இயலாது.

என்னைக் காண நண்பர் சிலர் வந்தனர்—அதே சமயத்தில் தோழர் குருசாமி அவர்களைக் காண தோழியர் குஞ்சிதமும், ரஷியாவும் (விரைவில் டாக்டர்!) வந்திருந்தனர். சந்தித்தோம்—கம்பிகள் இடையில்! கம்பிகள் மட்டுமா, அமைப்புகளே வேறுவேறு ஆகிவிட்ட நிலைமை. தோழியர் குஞ்சிதம் அவர்கள் நாலு சாக்லெட்டைத் தந்தார்கள்! அதைவிடச் சுவையுள்ள உணவு எனக்கு அவர்கள் இல்லத்தில் பலமுறை கிடைத்தது உண்டு, ஆனல், அந்த நாலு சாக்லெட்டுக்கு உள்ள சுவையே அலாதியானதல்லவா.

ஐயாயிரவர்

தம்பி! எனக்கு ஏற்பட்டது போன்ற பல்வேறு வகையான சுவையுள்ள சிறை நினைவுகளை இப்போது பெறக் கூடியவர்கள் ஐயாயிரம் தோழர்கள் உள்ளனர், நமது கழகத்தில். அவர்கள் இன்று ஒரு அமைப்பைக் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்பில் ஈடுபட்டிருக்கிருர்கள். தத்தமது தனி உணர்ச்சிகள், அமைப்பின் தரத்தையும் தன்மானத்தையும் உயர்த்துவதாக இருத்தல் வேண்டும் என்ற நேர்மையுணர்ச்சியுடன் இருக்கிருர்கள். அவர்களின் அனுபவம், சாதாரணமானதல்ல; நடாத்திய அறப்போரும் சாமான்யமானதல்ல.

நாம் அடக்குமுறைகண்டு அஞ்சுபவர்களா, அதனை எதிர்கொண்டு மார்பில் ஏற்றுக்கொண்டவர்களா, என்பதை, பெற்றுள்ள தியாகத் தழும்புகள் நமக்கெல்லாம் எடுத்துக் காட்டுகின்றன—பிறர்தரும் தீர்ப்புத் தேவையில்லை-நாம் பட்ட தடியடியும், சிறைவாசக் கொடுமையும் நினைவிலே எப்போதும் இருக்கிறது.

ஒரு பெரும் போராட்டத்தை நடத்திடத்தக்க அமைப்பு முறையும் ஆற்றலும் நமக்கு உண்டா, நாம் இப்போதுதானே பிரிந்து வந்து புதுப்பாசறை அமைத்திருக்கிரேம், என்ற அச்சமும் சந்தேகமும் எனக்கு இருந்தது—அதிலும் எங்கள் ஐவரை முதலிலேயே கூண்டுக்குள்ளே தள்ளி மூடிவிட்ட பிறகு, என் சந்தேகம் அதிகமாகிவிட்டது.

"சம்பத்து! சரியாக நடக்குமா..." என்று கேட்பேன் ஆயாசத்துடன்.

"நீங்கள் உள்ளே வந்துவிட்ட பிறகு, கிளர்ச்சி நடப்பதற்குத் தங்கு தடை ஏது, ஜோராக நடக்கும்" என்பான் குறும்புடன்.

ஒரு ஐந்நூறுபேர் சிறைப்படுவார்களா?—என்று கேட்பேன் தைரியத்தோடல்ல.

ஐந்து நூறு......இருக்கும்...... ஆயிரம்கூட இருக்கலாம் என்று உற்சாகத்தை மெள்ள மெள்ள வரவழைத்துக்கொண்டு பேசுவார் நெடுஞ்செழியன்.

பத்திரிகைகளைப்பிரித்தோம், ஏ! அப்பா! நாம் சம்பந்தப்பட்ட இயக்கமா இது—என்று நான் ஆச்சரியப்பட்டேன் — பத்திபத்தியாக—பக்கம் பக்கமாக—கிளர்ச்சிச் செய்திகள்—நூறு, ஐந்நூறு, ஆயிரம், இரண்டு, மூன்று, என்று வளருகிறது, வளருகிறது ஐயாயிரம் என்று சொல்லத்தக்க அளவிலே வளர்ந்தது. தடியடிபட்டோர், துப்பாக்கிக் குண்டடிபட்டோர், என்ற வகையில் செய்திகள் உருவெடுத்தன. தமிழகம் மட்டுமல்லாமல், இந்திய பூபாகம் முழுவதுமே, இந்தக் கிளர்ச்சி பற்றிய பரபரப்பான செய்தியைத்தான் கவனித்தன. அமெரிக்க நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் 'செய்தி' வெளிவந்தது என்றுல், பார்த்துக்கொள் தம்பி, கிளர்ச்சி எந்த அளவு வலுத்து இருந்தது என்று.

தம்பி! எந்தப் போராட்டத்தையுமே தங்கள் போராட்டத்துக்குச் சமமாகாது என்று எண்ணி, ஏளனம் பேசுவதும், தாங்கள் துவக்கும் போராட்டத்திலே தான் மறறவர்கள் வலிய வலிய வந்து சேர வேண்டுமே தவிர, பிறர் நடத்தும் போராட்டத்தில் கலந்து கொள்வதோ, அது முடியாது என்றுல் இன்முகம் காட்டுவதோ கூடத் தேவையில்லை, என்றும் பேசுபவர்களல்லவா, கம்யூனிஸ்டுகள், அந்த அதி தீவிரக் கட்சியின் தலைவர்களிலே இருவர், M. L. A.க்கள். மணலி கந்தசாமியும் ஈரோடு கே. டி. ராஜு அவர்களும் சிறையில் என்னைச் சந்தித்து, வெளியே நடைபெறும் நமது போராட்டம் பற்றித் தங்கள் மகிழ்ச்சி, நம்பிக்கை, பாராட்டுதல் ஆகியவைகளைத் தெரிவித்துச் சென்றனர் என்றுல், கிளர்ச்சியின் தன்மை எப்படி இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அன்பன்,

அண்ணுத்துரை.

திரட்டு

வான்கோழிக்கு புலவு!

எங்கேயும் வான்கோழி புலவாக்கப்படும்—(ருசியானது — சைவர்களுக்கு எமது அனுதாபம்!) ஆனால் வான்கோழி, புலவு கேட்டுப் பெறுகிறது என்றால், வேடிக்கையல்லவா! பெற்றிருக்கிறது!!

கைத்திறனும் வாய்த்திறனும் உள்ள மக்கள் கண்மூடி மக்களது நிலத்தை எல்லாம் கொத்திக்கொண்டு ஏப்பமது விட்டதாலே கூலி மக்கள் அதிகரித்தார்—அவர்களின் கஷ்டத்தைப் போக்க நில முதலைகளை ஒழித்திடச் சட்டம் வந்தது பல இடங்களில்.

ராஜஸ்தானில், முன்னாளில் ஏய்த்துப் பிழைத்து வந்த நிலப் பிரபுக்களின் கொட்டத்தை ஒடுக்க முற்பட்டனர். நிலச் சட்டம் பிறந்தது. நிலப் பிரபுக்கள் சும்மாவிடவில்லை! படை திரட்டினர்! குட்டிப் பிரபுக்களையும் கூடச் சேர்த்துக்கொண்டனர்! கிளர்ச்சி துவக்கினர்! 2000 பேர் சிறை சென்று தங்கள் சக்தியைக் காட்டினர். துப்பாக்கிப் பிரயோகத்தில்—ஏழை மக்கள்—2000 பிணம் விழுந்தாலும் பீதியோ பச்சாதாபமோ கொள்ளாத சர்க்கார் 2000 நில உடைமைக்காரர்கள் சிறை சென்றதும். கிடுகிடுவென்றாடி, அடியற்ற நெடும் பனைபோல் வீழ்ந்து சமரசம் தேடலாயிற்று. கிளர்ச்சி நடத்திய நில உடைமைக்காரர்களின் திருநாமம், பூஸ்வாமிகள்! அதாவது பூமியில் உள்ள தெய்வங்கள்!! அந்தத் தேவதைகள் சீறினால், ஆபத்தல்லவா! எனவே பூதேவர்கள் கோரிக்கைகளைக் கவனிப்பதாக வாக்குறுதி அளித்து, சர்க்கார் அந்தக் கிளர்ச்சியை நிறுத்தும்படி செய்துள்ளனர். பார்த்தீர்களா, வான்கோழியின் வெற்றியை! அது கூவுகிறது, அதற்குப் புலவு கிடைக்கிறது!!

பிரளயம்....நினைத்தால்!

"(கிருஸ்தவ சகாப்தத்தின்படி) ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக லட்சக்கணக்கான மக்கள், தலைமுறை தலைமுறையாக, ஒரு நாள் ஆண்டவன் இந்த உலகத்தை அழித்துவிடுவார் — (மகாப் பிளரயம் ஏற்படும்) என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால் இப்போதுள்ள நிலைமையில், நாமே விரும்பினால் நாளைக்கே உலகை அழித்துவிடலாம்; அந்தச் சக்தி பெற்றிருக்கிறோம்; இதை நினைக்கும்போது விந்தையாக இருக்கிறதல்லவா!" என்று ஜெனீவாவில் மாலடோவைப் பார்த்து ஒரு பிரிடிஷ்பிரமுகர் கேட்டாராம்மாலடோவின் மனதில் இந்த வாசகம் ஆழப்பதிந்ததாம்—மறுபடியும் ஒரு முறை கூறும்படி கேட்டாராம். சிந்தனையைக் கிளறும் கருத்து! புதிய பாடம் பெறவும் உலகில் சமாதானத்துக்காக புதுமுறை வகுத்துக்கொள்ள வேண்டும் என்ற பேரார்வத்தை எழவும் செய்யும் கருத்து!

பழரசமும் பர்மாவும்

இனி பர்மா சர்க்கார் நடத்தும் வைபவங்களில், ஆரஞ்சுரசமும் தேனீரும் மட்டுமே தரப்படுமாம். வேறுமதுபான வகைகளைத் தருவது இனி நிறுத்தப்படும். காரணம், மதுவிலக்கல்ல; பர்மா சர்க்காரால் செலவு தாங்க முடியாததாகிவிட்டதாம்; உயர்தர மதுவகைகள் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியிருப்பதால் பெரும்பொருள் செலவாகிறது; அதனால் ஏற்படும் சிரமத்தைக் கருதியே, பர்மா சர்க்கார் ஆரஞ்சுரசம் போதும் என்று கூறுகிறது. ஆனால் 'அது, இல்லாமல்' எந்த நாடும், தோட்டக் கச்சேரியும், கமிட்டியும், கமிஷனும் ரசிக்காதே, ருசிக்காதே என்று கூறுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். என்ன செய்வதய்யா, எங்கள் பணவசதி பழரசம் தரமட்டுமே அனுமதிக்கிறது என்று பர்மிய சர்க்கார் கூறக்கூடும்.

இது, சரியான வேலை!

உலக அழகிகள் தேர்ந்தெடுக்கப்படும் விசித்திர முறையைப் பலரும் கண்டித்திருக்கிறார்கள், ஆனால் தக்க பாடம் வரும்படி, வட இத்தாலியில் உள்ளவர்கள் ஒரு வேலை செய்திருக்கிறார்கள், வட இத்தாலியில் உள்ள ஒரு சங்கத்தார், அவலட்சணவான்களில் முதல்வரைபொறுக்கும் போட்டி நடத்தினர்! அழகுப் போட்டி போலவே, இதற்கும் ஆட்கள் வந்தனர்; மொத்தத்தில் 28 பேர் போட்டியிட்டனர்; முப்பதுவயதுள்ள காசனோவா என்பவன் முதல் பரிசு பெற்றான்—அவலட்சணத்தில் இவனை மிஞ்சுவார் இல்லை என்று தீர்ப்பளித்தனர். இந்தப் போட்டியில் தீர்ப்பளிக்க ஆறு அழகான ஆரணங்குகள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

அவலட்சணப் போட்டியில் வெற்றி பெற்றவனுக்கு உள்ள பெயர் காசனோவா! இத்தாலியிலும் ஐரோப்பாவில் பலப்குதிகளிலும் பெண்களை மயக்குவதிலும் காமக்களியாட்டத்திலும் நிகரற்ற சாமர்த்தியக்காரனாக விளங்கினான் காசனோவா என்றொருவன் அன்றோர் நாள்-ரசமான கதைகள் உண்டு அவனைப்பற்றி! அதே பெயர் இந்த அவலட்சணத்துக்கு!!

அமெரிக்க மோகம்

ஆசியாவிலுள்ளவர்களை, சிறப்பாக இந்தியாவிலிருப்பவர்களை, பல துறைகளிலே நிபுணர்களாக்குவதற்காக, அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கும் வாடிக்கை வேகமாக வளர்ந்து-நோய் போலப் பரவி விட்டது. எந்தத்துறையிலானாலும்அமெரிக்காதான்ஆசானாக இருக்க முடியும்என்று நம்பினர்—அமெரிக்க மோகம் தலைக்கேறிவிட்டது சர்க்கார், இதிலே கண் மண் தெரியாமல் ஈடுபட்டது. அமெரிக்க உதவி திட்டத்தின்படி இங்கிருந்து பயிற்சிக்காகப் பலர் அமெரிக்கா சென்றனர். ஆனால் அங்கு சென்று பெற்ற பயிற்சி, எந்தத் துறைபற்றியதாக இருந்தாலும் இங்கே உள்ள சூழ்நிலைக்கு பயன் படத்தக்கதாக அமையவே இல்லை. இதை இப்போது இங்குள்ளவர்களும் உணர்ந்துள்ளனர், அமெரிக்காவும் ஒப்புக் கொண்டிருக்கிறது. எனவே அமெரிக்காவின் உதவி பெறுபவர்கள் இனிப் பயிற்சிக்காகவும், நுட்பங்கள் நுணுக்கங்கள் அறிவதற்காகவும், ஜப்பானுக்கு அனுப்பப் படுவர். ஜப்பானில் கிடைக்கும் 'அனுபவம், இங்குள்ள சூழ்நிலைக்குப் பயன்படத் தக்கதாக அமைகிறதாம். பெரும் பணமும் காலமும் நாசமான பிறகேனும் இந்த 'அறிவு' பூத்தது கண்டு மகிழ வேண்டியதுதான்.

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.